KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 3] 1930 ஹு அக்டோபர் மீ 9உ [No. 40.

8-NOV 1930

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 781
2. குறுந்தொகை (பாட்டு 216—235)
K. இராமரத்நம் ஐயர் B.A. 783
3. தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன் தூதுப் படலம்) 788
4. பிரஜைகளின் கடமை (Plato's Dialogue)
K. இராஜகோபாலன் 790
5. கம்ப ராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 792
6. இளமையும் முதுமையும்
T. S. நடராஜ பிள்ளை B. A., B. L. 794
7. வர்த்தமானம் 799

கலாநிலயம்

தலைகீழ்க் கணக்கு.

18924

சந்தையிற் கூட்டம் இப்பாடசாலைகள், இதிலோர் சந்தேகமில்லை. ஆதலாற்றான் உயிர்க்குரிய ஊதியம் ஒன்றும் அவைகளால் எய்துதல் ஆவதில்லை. இன்று இவ்விதழில் மொழிபெயர்த்து வந்துள கட்டுரையிற் காணும் ஸாக்ரடீஸின் விழுமிய வாக்கின்படி உயிர் சுமந்திருப்பதொன்றே வையத்தில் வாழ்வாங்கு வாழ்தல் ஆகாது. இதனை மறக்கும் பேதை மாக்களை ஏதென்றியம்பினும் மிகையன்று. உடுப்பதற்கு உடையும் உறைவதற்கோர் கூரையும் வயிற்றிற்கு உணவும் வாய்த்ததெனின் தமக்கு வேண்டுவதொன்றும் பிறிதில்லை யென இருப்பார்க்கும், போகங்களின்பொருட்டுப் பொருள்மிக ஈட்டப் புகுவார்க்கும் அந்தத்தில் பேதம் பெரிதொன்றுமில்லை. உயர்ந்துயர்ந் தோங்குகின்ற வாழ்க்கையிலோ அவ்விருதிறத்தோர்களும் மனம்வைத்தாரலர். எனினும் பெருமையைச் சிறுமை கொண்டு அளக்கக்கூடுமெனின் பின்னவரின் முன்னவரே பெரியவர் என்று எண்ணுதல்வேண்டும். ஆனால் வாழ்க்கைவகையினில் உயர்தரு பெருமையை உணராததெல்லாம் சிறுமையென்னும் அவ்வொரு இனத்தையே சேருமாகையால் அச்சிற்றினத்தவர். தம்மில் ஏற்றமும் தாழ்வும் எடுத்தளப்பது, இயல்வதுபோலத் தோன்றுமேனும் ஆழ்ந்துநோக்குங்கால், ஆற்றாமை புலப்படும். எனின் செல்வம் செல்வாக்கு அனைய சாதனங்களால் சுகங்கள் சில தாம் அனுபவிப்பதாக மற்றவரை நம்பச் செய்யவேண்டுமெனும் ஆசையால் அலைவார் சிலர், மற்றவரும் "முன்னேற்ற"மடைந்து அந்நிலையை எய்தவேண்டும் என முயல்வதெல்லாம் சிறுமைக்குக் கைதந்து உதவுகின்ற ஓர் காட்சியேயல்லாமல் வேறு எளியாரை வலியராக்கும் வாய்மையோ அதினில் எள்ளவும் இல்லை யென்பது திண்ணம். தற்காலக் கல்விச்சாலைகளெல்லாம் கருத்து முற்றிலும் ஊன்றிய வேரினால் வளர்ந்தோங்கித் தழைத்து யாரையும் தம்மவராய்த் தழுவிக்கொள்ளுஞ் செவ்விய எண்ணங்கள் யாவும் சிறக்குமாறு செய்வதோ சிறிதுமில்லை. எனின் உயிரற்ற இக்கூடங்களுள் குழுமிக்குழுமி யுழல்வதால் உயர்வுற்ற வாழ்வு தான் எய்தற் கூடுமோ?

சான்றோருடைய பண்டைநாட் செய்தி யிதுவன்று. பெரும்பாலும் தந்தையே தன்னரும் புதல்வனுக்குத் தனிப்பெரும் கல்வியைச் சொல்லித் தருவானாயினன். இதனால் அம்மைந்தன், கற்கின்ற பாடமே யல்லாது தன் தந்தையின் அன்பையும் ஒருங்கே உணர்வானாயினன். ஆசையால் மாத்திரமன்றி அறிவினாலும் தந்தைக்கும் மகனுக்கும் அடர்ந்ததோர் தொடர்பு உண்டாகின்றது என்னுமளவில் இதன் பயன் அனைத்தையும் இயம்பினவ ராகமாட்டோம். இவ்வன்பும் அறிவும் மாறிமாறி ஒன்றை யொன்று பெருக்கிக்கொண்டேபோகும் பெற்றியுடையனவாம். ஆசையால் தந்தை தன் மகனுக்குக் கல்வியுடன் அறிவைப் புகட்டுகின்றான். இவ்வறிவு வளர்ந்துவரும் மகனைக் காணுந்தோறும் அவன்பால் தந்தைக்கு அன்பும் அதிகரிக்கொண்டே வரும். இனி அறிவினைப் பெற்ற மைந்தனும் தன்பால் தந்தை கொண்டுள அன்பின் தன்

மைபை உணர்வானாகி எதிரன்பு, தானும் தன்னையே யறியாமல் தந்தைபால் மிகமிகச் செலுத்தத் தலைப்படுவது இயற்கையே. இன்னவாறு தன்பால் அன்பு அதிகரிக்கும் மகனிடத்துத் தந்தையினதன்பும் விஞ்சித் தலைசிறக்க நேராமல் என் செய்யும். மற்றும், விஞ்சியுள அவ்வளவிற்கு எட்டுமாறு மைந்தனது அன்பும் மேலோங்கி வளர்வதாகும். இப்படியே விஞ்சவிஞ்ச அன்பு இருதிறத்தும் மாறிமாறி வளர்வதற்குரிய வகையே வழங்கியது, தன் மகற்குத் தானே கல்வி கற்பிக்கும் பண்டை நாட் பெருமை வாய்ந்த அக்கல்வி முறையே. தந்தைவயின் தான் அறிவதற்குளவற்றையெல்லாம் கற்றுத்தேர்ந்த மாணவன் பின் ஆசிரியனொருவனை அடுக்கின்றான். அவ்வாசிரியனும் ஆசையால் அவனுக்குப் போதிக்க இசைகின்றானல்லாமல் காசிற்குக் கருத்துடைய கொள்கைபாலன்று. எனின் தந்தைக்கும் மைந்தனுக்கும் இருந்ததோர் தொடர்பு போன்றே ஆசிரியனுக்கும் மாணுக்கனுக்கும் அன்பும் அறிவும் ஒன்றினையொன்று பற்றி வளர்வதாகின்றன. அங்குக் கற்கின்றபாடங்கள் பலவாயினும் ஆகுக, சிலவாயினும் ஆகுக. இங்குத் தற்காலப் பாடசாலைகளில் கற்பதற்கோ ஒருபோதும் இபலாததொன்றை அங்கு அவன் கற்கின்றான். அதுதான் என்னவெனில், தான் கற்றதை, கூலி யொன்றும் கேளாமல் பிறருக்குக் கற்பிக்கவேண்டும் என்னும் கடமையில் உண்மையான ஊக்கம் உடைமையே. இதன் அடையாளத்தை இக்காலத்திலும் ஓரளவு காணலாம். நம் தமிழ்ப் பண்டிதர்கள் பெரும்பாலும் ஒருஆசிரியனை யடுத்துப் பாடங்கள்கேட்டுப் பயின்றிருப்பவராவர். அன்னவரொருவரிடத்திற் சென்று "பெரியீர் எனக்குத் தமிழ் கற்பிப்பீரோ" என வேண்டினால் 'ஐப, அது செய்வன்' என்பாரல்லது, 'ஆம் எக்கூலி தருகின்றாய்' என்று ஒன்றும் வினவமாட்டார் என்பது யாவரும் அறிந்ததேயாம். இதற்கெதிர் நமது தற்காலக் கலாசாலைகளில் கற்றுத் தேர்ந்து பட்டங்கள் பெற்று உபாத்திமைத் தொழில் அமர்ந்திருக்கின்றவர்களில் எத்தனைபேர் தாம் கற்றிருப்பதைக் கைக்கூலிவாங்காமல் பிறருக்குச் சொல்லிவைக்க இசைவார் என்பதை எண்ணியும் பார்க்கவேண்டுமோ.

ஆங்கிலப் புலமையோர் கார்டினல் ந்யூமன் காட்டும் வண்ணம், ஆசிரியனிடத்தில் கற்பது பாடம் என்னும் அவ்வொன்று மாத்திரமே யன்று. ஆசிரியனொடு உண்டு உறங்கி உரையாடி, அவன் நடக்குங்கால் நடந்தும் இருக்குங்கால் இருந்தும் இடையறாது பயில்வதால், படிக்கின்ற பாடங்களுடன் அவனது உயர்ந்த நோக்கமும், விழுமிய ஒழுக்கங்களும் நற்குணங்களும் மாணவர்களைச் சேர்கின்றன. அன்றியும் வாய்ச்சொல்லால் போதிப்பது மாத்திரமே ஆசிரியனது கருவியன்று. அவன் ஒவ்வோர் வேளை, பார்க்கின்ற பார்வையும் நிற்கின்ற நிலையும் சிரிக்கின்ற சிரிப்பும் ஆட்டுகின்றகையும் ஆயிரமடங்கு அறிவு அளிக்க வல்ல சாதனங்கள் என்று முன்சொன்ன கார்டினல் ந்யூமன் என்பவர் இனிது விளம்பி யிருக்கின்றார். எல்லா நிலையும் எல்லாச்சிரிப்பும் கையினது எல்லா ஆட்டமும் அறிவுறுத்தும் கருவிகள் ஆகிவிடமாட்டா. அது ஆசிரியன் மாணவன் என்னும் இருவர்தம் மனமும் ஒருங்கே ஒருமுகப்பட்டு நிற்கின்றதோர் செவ்வியிற்றானே நேரவல்லது. அச்செவ்வி எப்பொழுது வாய்க்குமென்று எவராலும் இயம்ப வியலாது. ஆகையால் ஒரு பொழுதும் அகலாது உறைகின்ற ஆசிரிய மாணவர்களுக்கிடையேதான் இப்பெறலரும் பெரும் பயன் பெறுவதெனின் பெறுதற்கு இயலும். இதுபற்றியே முன்னைநாட்களில் குருகுலவாச மென்பது அத்துணையளவு கொண்டாடப் பெற்றது. கல்வியின் தத்துவம் யாதென வுணர்ந்த மெய்யறிவுடையோர் அனைவரும் கையாளும் முறை இதுவொன்றேயாகும். மற்றுச் சந்தையிற் கூட்டமாம் இற்றைநாள் பாடசாலைகளில் அத்தகைய அருமைச் செவ்விகள் நேரலாம் எனச் செப்பினும் அறிஞர் நகைப்பரே.

இவ்வண்ணம் எண்ணியெண்ணி எத்துணைதான் இயம்பினும் யாதுபயன் எனச் சிந்திக்குங்கால் சோராதவுள்ளம் மிகச் சில. முன்னோரிடத்தில் உரைத்தபடி, வண்டிமாட்டை மாட்டுவண்டி யாக்குவதற்குக் கைகண்டதோர் கருவி இக் கல்வியெனும் சொல் என்று கருதிக் கட்டாயக் கல்வியென்றும் உயர்தரக் கல்வியென்றும் கூட்டங்கூட்டமாய்ப் பிள்ளைகளைக் கற்பித்துக் குவிப்பதே கடனென விவகரிக்கு மிந்நாளில் ஈரொரு மாணவன் ஒவ்வோர் ஆசிரியனை அடுத்துப் படிப்பதென்னும் இப்பேச்சு அம்பலத்தில் ஏறுவதெங்ஙனம்! புதியன கழித்து, அழைக்க நிற்கும் பழையன பலவுள. மெய்க்கல்வியே நோக்கமெனின் அவைகளில் முதன்மையானது முன்னைநாள் கல்விமுறை. ஈதுணர்ந்த சிலர் குருகுலங்கள் ஆங்காங்கு நிறுவ முயலலாவதும் அறிவோம். ஆயினும் வெளிநின்ற வாழ்க்கையின் நோக்கமெல்லாம் மாறுக உள்ளிருக்கும் அக்குருகுல மாணவர்க்குக் கைகூட இயலும்பயன் சிறிதினும் சிறிதே யாதல்வேண்டும். அதுவுமன்றி இடத்தாலும் பேராலும் அங்கிருக்கும் இரண்டொருவர் பெருமையாலும் இக்குருகுலங்கள் ஒருவாறு வேறுபடலாமெனினும், அக்குருகுலங்கள் என்பவைகளும் மற்றைய பள்ளிக்கூடங்களும், ஒருசிலர் சேர்ந்து ஏற்படுத்தும் ஓர் ஏற்பாட்டின்படி நிகழ்கின்ற தன்மையில் ஒக்கும். இப்படிச் சிற்சிலர் ஒருங்குகூடிச் செய்கின்ற ஏற்பாடுகளொன்றும் ஆதியில் துவக்கிய அரிய நோக்கத்தை முற்றிலும் நிகழ்த்திவைப்பதென்பது . இவ்வுலகத்தியற்கையில் எங்கும் இல்லை. ஆதலாற்றான் இக்கால ஏற்பாட்டின்படி அமைக்கப்பெற்ற சில குருகுலங்கள் தமக்குரிய பெருமையோடு திகழக் காண்கிலம். உண்மையாய நன்மை வேண்டுமெனின் அந்நலத்தைச் செய்கின்ற உத்தமர் மாத்திரந்தான் இருத்தல் வேண்டுமே யல்லாது அதனைச் செய்வதற்கு முறைகளையும், சங்கங்களையும் அமைப்பதென்பது அறிவோ. செய்ய நிற்பது தீமையெனின், ஒருவனைக்காட்டிலும் பத்துபேர் ஒன்று சேர்ந்தால் பதின்மடங்கு தீமை புரியலாகலாம். ஆனால் நன்மைக்கு இயன்றதோ தலைகீழ்க் கணக்கு. ஒருவன் தனியே ஒரு பங்கு நன்மை செய்வானேல், பத்துபேர் சேர்ந்து பதின்மடங்கு நன்மை பெருகுவதற்குப் பதிலாக அப் பத்தில் ஒருபங்கு நன்மை விளைந்தால் போதுமெனும்படி முடிகின்றது. ஈதுணர்ந்தால் எத்துணையோ இடர்களினின்று இக்கால மக்கள் தப்புவர்.

குறுந்தொகை

[767-வது பக்கத் தொடர்ச்சி]

கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றனார் } 216 { பாலை

ஓதலிற் பிரிந்த தலைவன் குறித்த கார்ப்பருவ வரவின்கண் மீளாமையால் ஆற்றானாய் வருந்திய கிழத்தி தன்னைத் தேற்றிய தோழிக்குச் சொல்லியது.

அவரே,
கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே;
யானே,
தோடா ரெல்வளை ஞெகிழ வேங்கி
பாடமை சேக்கையிற் படர்கூர்ந் திசினே;
அன்னள், அளியள், என்னாது மாமழை
இன்னும் பெய்யும், முழங்கும்,
மின்னும், தோழி,என் னின்னுயிர் குறித்தே.

(உரை). தோழி, அவரோ அழியாததும் சிறந்ததுமான கல்விப்பொருளை ஈட்டும்பொருட்டுக் குறவர் வள்ளிக்கூத்தாடுதலை உடைய காட்டைக்கடந்துசேணகன்றார்; யானோ தொகுதிபெற்ற ஒளிபொருந்திய வளையல்கள் நெகிழ்வதை நோக்கி ஏங்கித் துயில்வதற்கமைந்த படுக்கையில் தூக்கங் கொள்ளாது வருத்தமிகுந்தவள் ஆயினேன். இத்தகையினள் இவள், நம்மால் அளிக்கப்படத்தக்கவள் என்று எண்ணாது கருமேகம் எனதினிய உயிரை வாங்கக்கருதி ஓயாது இன்னும் மழையைப் பொழிகின்றது, இடிக்கின்றது, மின்னுகின்றது. (நான் செய்வதென்னோ?)

'கேடில் விழுப்பொருள்' என்றது 'கல்விப்பொருளை'; 'நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள் செய்வார்க்கும் அஃதிடம்' என்றார் திருத்தக்க தேவரும்: (சிந்தாமணி—77). தருமார் - தரும், தேடும் பொருட்டு. 'பாசிலை வாடாவள்ளி', என்றது வாடும் வள்ளைக்கொடியின் வேறான வள்ளி' என்னுமொருவகைக் கூத்தை. இது இழிந்தோர் காணுங் கூத்து. இதன் விவரத்தைத் தொல்காப்பியம் பொருளதிகாரம், புறத்திணையியல் சூத்திரத்து 'வாடாவள்ளி வயவரேத்திய' என்றதன் உரையால் அறிக. 'வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்' என்று பெரும்பாணாற்றுப்படையிலும் வந்துளது. இவ்வாறே மலைமல்லிகை 'பறவாக்குளவி' என்றும், வஞ்சிமரம் 'பூவா வஞ்சி' என்றும், வேங்கைமரம் 'பாயா வேங்கை' என்றும், தரை 'இயங்காவையம்' என்றும் சான்றோர் செய்யுளகத்து வந்தமை காண்க. தோடு - தொகுதி, கூட்டம். பாடு - படுத்தல், தூங்குதல்; பெருமையுமாம். மா மழை - கரிய மேகம்.

'அவரே', 'யானே' என்பன தனிச்சொற்கள் - 'கேடில் விழுப்பொருள்' என்பதை 'வறுமையைப் போக்குவதும் பெருமையைத் தருவதுமான செல்வப்பொருள்' என்றே தலைமகன்கூறியதைத் தலைமகள் கொண்டு கூறினாள் எனலுமாம்.

தங்கால் முடக்கோவலனார்] 217 [பாலை

உடன்போக்கை நயப்பத் தலைமகளுக்குத் தோழி சொல்லியது.

'தினைக்கிளி கடிதெனிற் பகலு மொல்லும்;
இரவுநீ வருதலி னூறும் அஞ்சுவல்;
யாங்குச்செய் வாமெம் மிடும்பை நோய்'கென
ஆங்கியான் கூறிய அனைத்திற்குப் பிறிவுசெத்
தோங்குமலை நாடன் உயிர்த்தோன் மன்ற;
ஐதே காமம், யானே
கழிமுதுக் குறைமையும் பழியுமென் றிசினே.

(உரை). 'தினையினின்று கிளிமுதலிய பறவைகளை நாங்கள் ஓட்டிக்கொண்டு தங்கும் புனத்துக்கண் நீ வருவதென்றால், அப்பொழுது பகற்காலமாகும். இரவில் நீ வருவதென்றால், உனக்கு நேரும் ஏதங்குறித்து நாங்கள் அஞ்சுகின்றோம். யாம் படும் இவ்விருவகைத் துன்பத்துக்கும் யாங்கள் என்ன செய்கின்றது?' என்று நான் சொன்ன அதற்கே ஓங்குமலை நாடன் உன்னைப்பிரிய நேர்ந்ததைக் கருதிப் பெருமூச் செறிந்தான். உடன்போக்கு அறிவின் முதிர்ச்சியையும் மிக்கபழியையுந் தரும் என்று சொல்லி நீ மறுப்பதை யான் அவனுக்குச் சொன்னேனாயின், (அவனுடைய துன்பம் இத்தன்மைத்தாயிருக்கும் என்று என்னாற் சொல்லமுடியாது.) காமம் மிகவும் வியக்கத்தக்கதேயாம்.

'தினைக்கிளி......அஞ்சல்;...நோய்க்கு' என்றது தோழி தலைவனுக்கு இரவுக்குறியும் பகற்குறியும் மறுத்தது. பிறிவு-பிரிவு; 'பிறிது' என்றும் பாடம் 'ஐதேகம்ம'. என்று பிரதிகளிற் காணப்படும் பாடம் பொருள் பயவாமையின் நற்றிணை, 143-ம் பாட்டிற்போலவே இங்கும் மூலபாடம் 'ஐதே காமம்' எனத் திருத்திக்கொள்ளப்பட்டது. ஐதே - வியக்கத்தக்கதே; 'ஐ வியப்பாகும்' (தொல்காப்பியம்).

கொற்றனார்] 218 [பாலை

தலைவனது பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

விடர்முகை யடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணாது கைந்நூல் யாவாம்;
புள்ளு மோராம்; விரிச்சியும் நில்லாம்;
உள்ளலு முள்ளாம் அன்றே, தோழி;
உயிர்க்குயிர் அன்ன ராகலிற் றம்மின்
றிமைப்புவரை யமையா நம்வயின்
மறந்தாண் டமைதல் வலியோர் மாட்டே.

(உரை). தோழி, நமது உயிருக்குயிராயிருந்தமையின் இமைப்பொழுதும் அவரையின்றி உயிர்வாழமாட்டாத நற்திறத்துமறத்தலைச்செய்து, தாஞ்சென்ற அவ்விடத்திலேயே தங்கவல்லவராகிய காதலரைக் குறித்து இனி நாம், முழைகளின் கூட்டத்தையுடைய மலையிடத்துள்ள வெற்றி பொருந்திய காளிக்குப் பரவுக்கடனைச் செலுத்திக் கைக்குக் காப்புநாணுங் கட்டோம்; புள்ளின் நிமித்தத்தையும் நாடோம்; நற்குறியாகிய விரிச்சிமொழியையும் எதிர்பார்த்து நில்லோம்; நினைக்கவும் மாட்டோம், அல்லவா?

விடர் - முழை, குகை. முகை - கூட்டம். இதனை,

கூனியு மீட்டமுங் குழுமலுந் தோடும்
* * * *
* * முகையும் மொய்யும்
* * * *
திரளையுஞ் சவையும் அவையுங் கூட்டம்

என்ற பிங்கலந்தைச் சூத்திரத்தால் அறிக. விடரையுடைய முகை - வெடிப்பினையுடைய குகை என்றுமாம். சூலி - காளி, துர்க்கை. யாவாம்; யாத்தல் - கட்டல். புள்-பறவைகளின் செயலைக் கொண்டு சகுனம் பார்த்தல். விரிச்சி - நன்னிமித்தமாகிய நற்சொல். தற்செயலாய் ஒருவர் சொல்லும் வார்த்தைகளைக்கொண்டு நன்னிமித்தங் கொள்ளல் 'விருச்சி' என்பது.

வேண்டிய பொருளின் விளைவுநன் கறிதற்
கீண்டிருள் மாலைச் சொல்லோர்த் தன்று

என்று கொளுவுரைத்து,

எழுவணி சிறா ரிருண்மாலை முன்னிற்
குழுவினங் கைகூப்பி நிற்பத் - தொழுவிற்
குடக்கள்நீ கொண்டுவா வென்றான், குனிவிற்
றடக்கையாய் வென்றி தரும்

என்று அதற்கு உதாரணமுங் காட்டினர் புறப்பொருள் வெண்பாமாலையில் ஆசிரியர் ஐயனாரிதனார். முல்லைப்பாட்டில்

பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
*   *   *   *
அரும்பவி ழலரி தூஉய்க்கை தொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப
*   *   *   *
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுய ரலமரல் நோக்கி யாய்மகள்
*   *   *   *
இன்னே வருகுவர் தாய ரென்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம். (11—17)

என்று கூறியதாலும் இதனைத் தெளிக.

தம்மின்று - தம்மின்றி, தம்மையின்றி. இமைப்பு வரை - இமைக்குமளவு; இமைப்பொழுது. வலியோர் - வல்லோர்.

வெள்ளூர்கிழார் மகனார் வெண்பூதியார் } 219 { நெய்தல்

வரையாதொழுகுந் தலைமகன் சிறைப்புறத்தானாக அவனுணருமாறு தன்னிலையையெடுத்துத் தலைமகள் தோழிக்குரைத்தது.

பசப்பென் மேனி யதுவே; நயப்பவர்
நாரி னெஞ்சத் தாரிடை யதுவே;
செறிவுஞ் சேணிகந் தன்றே; அறிவே
ஆங்கட் செல்கம், எழுகென ஈங்கே
வல்லா கூறி யிருக்கும் ; முள்ளிலைத்
தடவுநிலைத் தாழைச் சேர்ப்பற்
கிடமன், தோழி,என் னீரோ வெனினே.

(உரை). பசப்பு எனது மேனியிடத்ததாய்த் தங்கிவிட்டது; எனது ஆசை அவருடைய அன்பற்ற நெஞ்சமுற அரிய வழியிற் சென்றுவிட்டது; நிறையாகிய அடக்கமும் வெகுதூரத்தே அகன்றுவிட்டது; அறிவு 'அவரிருக்கும் அவ்விடத்துச் செல்வோம், எழுக' என்று செய்ய வொண்ணாதவற்றைச் சொல்லிக்கொண்டே இங்கிருக்கின்றது; எனது பண்போவெனின் அவை முள்ளோடு கூடிய இலைகளையுடைய பெரிய நிலையினதாகிய தாழைகள் மிகுந்த நெய்தனிலத்தலைவராகிய அவர் வசமாய் விட்டது. இனித் தோழி, யாம் செய்யக்கடவதென்?

நார் - அன்பு. வல்லா - வல்லன அல்லாதன; செய்ய வொண்ணாதன ; ஆ, எதிர்மறைப் பொருளில் வந்தது. தடவு - பெருமை, விசாலம். நீர் - பண்பு; நாணம், மடம் முதலிய குணங்கள்.

ஒக்கூர் மாசாத்தியார்] 220 [முல்லை

கார்ப்பருவ வரவின்கண் குறித்தபடி தலைவன் வாராமையால் வருந்திய தலைவி தோழியிடஞ் சொல்லியது.

பழமழைக் கலித்த புதுப்புன வரகின்
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை
அருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை
வெருகுசிரித் தன்ன பசுவீ மென்பிணிக்
குறுமுகை யவிழ்ந்த நறுமலர்ப் புறவின்
வண்டுசூழ் மாலையும் வாரார்,
கண்டிசின், தோழி, பொருட்பிரிந் தோரே.

(உரை). கார்காலத்துப் பழைய மழையினால் புதுப்புனத்திடத்துத் தழைத்த வரகங்கதிரனது தலைகள் மான் கறித்துக் கூழைப்பட்ட பரந்த முல்லைவைப்பில் அருவிகள்சார்ந்த இடங்களில் முல்லைக்கொடியின் சிரிக்கும் காட்டுப்பூனையின் பல்வரிசையைப் போன்ற சிற்றரும்புகள் மென்மையான தமது முறுக்கவிழ்ந்து மலர்ந்த புதிய நறுமலர்களில் வண்டுகள் வந்து சூழும் மாலைப் பொழுதின்கண்ணும், பொருள்வயிற் பிரிந்த காதலர் வந்திலர், தோழி. (இனியாம் என் செய்வாம்?)

கண்டிசின் - காண்பாயாக; ஓர் முன்னிலை அசை. கார்காலத்திலும் பெரும்பாகம் கழிந்துவிட்டதென்பான், 'பழமழை' என்றான். 'பசுவீ நறுமலர்' என்று பண்புத்தொகையாகக் கொள்க.

உறையூர் முதுகோற்றனார்] 221 [முல்லை

இதுவுமது

அவரோ வாரார்; முல்லையும் பூத்தன;
பறியுடைக் கையர் மறியினத் தொழிய
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை இடைமகன் சென்னிச்
சூடிய வெல்லாம் சிறுபசு முகையே.

(உரை). கார்காலம் வந்தமையால் முல்லைகள் அரும்பிப் பூக்க ஆரம்பித்தன; மீனைப் பிடிக்கும் பறிகளை யேந்திய கையராய் இடையர்கள் செம்மறியாட்டினத்தோடு சென்று கானத்திலே தங்கிவிட, கறந்த ஆட்டுப்பாலைக் கொணர்ந்து கொடுத்துவிட்டுக் கூழை எடுத்துக்கொண்டு மேய்ச்சற்றலைக்குத் திரும்பும் ஆடுகளைமேய்க்கும் இடைச்சிறார் தந்தலையில் சூடிய வெல்லாம் சிறிய பசிய, முல்லை யரும்புகளே.

பறி - மீன்பிடிக்கும் ஒருவகை நெருங்கப் பின்னாத கூடை. மறி - செம்மறியாடு. யாடு - இங்குச் செம்மறியாட்டின் வேறாகிய வெள்ளாடு.

சிறைக்குடி ஆந்தையார்] 222 [குறிஞ்சி

தான் விரும்பிய வாயிலாகிய உயிர்ப்பாங்கியைத் தனது குறையை முடித்துத் தருமாறு குறையிரப்பத் துணிந்து அவளையுற்றுத் தலைமகன் சொல்லியது.

தலைப்புணை கொளினே தலைப்புணை கொள்ளும்;
கடைப்புணை கொளினே கடைப்புணை கொள்ளும்;
புணைகை விட்டுப் புனலோ டொழுகின்
ஆண்டும் வருகுவள் போலும், மாண்ட
மாரி ப்பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரிந் உறழுங் கொழுங்கடை, மழைக்கண்
துளிதலைத் தலைஇய தளிரன் னோளே.

(உரை). சிறந்த மழைக்காலத்தில் சிறு சண்பகத்தின் நீரொழுகும் அரும்பின் செவந்த மேற்புறத்தை ஒத்த கொழுமையான கடைப்பாகத்தையுடைய குளிர்ந்த கண்களையும், மழைத்துளிமேலே பெய்துவிட்ட தளிரையொத்த சாயலையும் உடையவளாகிய இவள் (நீராடும் போது) தன்னுயிர்ப் பாங்கி புணையின் தலைப்பக்கத்தைக் கொள்வான், கொள்வானாயின் தானும் தலைப்பக்கத்தைக் கொள்வாள், அவன் புணையின் கடைப்பக்கத்தைக் கொள்வானாயின் தானும் கடைப்பக்கத்தைக் கொள்வாள்; அவன் புணையைக் கைவிட்டு நீரோடு போவானாயின் தானும் அவ்வாறே போவான் போலும்.

தலைப்புணை, கடைப்புணை - புணைத்தலை, புணைக்கடை. செவ்வெரிந் - செவந்த முதுகு, அல்லது மேற்புறம். உறழும் - ஒக்கும், போலும். மழைக்கண்ணையுடைய தளிரன்னோள்.

இச்செய்யுளை இறையனார் அகப்பொருள் 9-வது சூத்திர உரையில் தோழிக் கூற்றாகக்கொண்டார் நக்கீரனார்.

தொல்காப்பியப் பொருளதிகாரம், களவியல் 11வது சூத்திர உரையில் இதனை மறுத்துத் தலைமகன் கூற்றாகப் 'பெட்டவாயில் பெற்றிரவு வலியுறுப்பினும்' என்பதற்கு மேற்கோளாகக் காட்டினார் நச்சினார்க்கினியர்.

மதுரைக்கடையத்தார் மகனார் வெண்ணாகனார் } 223 { குறிஞ்சி

வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகனது பிரிவு நீட்டித்தவழி வேறுபட்ட தலைமகளின் வேறுபாட்டைக்கண்டு வற்புறுத்திய தோழிக்கு அவள் கூறியது.

பேரூர் கொண்ட ஆர்கலி விழவிற்
செல்வாம், செல்வாம் என்றிவண் நல்லோர்
தழலுந் தட்டையு முறியுந் தந்திவை
ஒத்தன நினக்கெனப் பொய்த்தன கூறி
அன்னை யோம்பிய ஆய்நலம்
என்னைக் கொண்டான்; யாமின்ன பாவினியே.

(உரை). இப்பெரிய ஊரிலுள்ளார் கொண்ட ஆரவாரத்தோடு கூடிய மணவிழவிற்கு மணக்கோலத்தோடு நாம் செல்வாம், செல்வாம் என்று சொல்லிக்கொண்டே வரையா தொழுகும் அத்தீயவொழுக்கினன், நான் தினைப்புலங்காத்திருந்த காலைப் பலகாலும்வந்து தழல், தட்டை, அசோகந் தளிர் இவற்றைக்கொணர்ந்து 'இவை நினக்குப் பொருந்தியன' என்று பொய்மொழிகளைக்கூறித்தந்து என்னை மதிமயக்கி, அன்னை காத்தோம்பித்த எனது அழகின் நலத்தை வெளவியுண்டு இப்பொழுது கைவிட்டகன்றான். அதனால் இத்தகைய பாவியேம் ஆயினேம் யாம்.

விழவு - மணவிழா. நல்லோர் - குறிப்புமொழி; பன்மையாற் கூறியது செற்றத்தால். தழல், தட்டை என்பன கிளிகடி கருவி விசேடம். தழலாவது கையாற் சுற்றின காலத்துத் தன்னிடத்து ஓசைபிறக்கும் கருவி. தட்டையாவது மூங்கிலைக் கண்ணுக்கண்ணுள்ளாக நறுக்கிப் பலவாகப்பிளந்து ஓசையுண்டாகத் தட்டுவதோர் கருவி. முறி - தளிர். கிளி முதலியவற்றைக் கடித்து புனங்காத்தற்குப் பொருந்தியவென்று சொல்லி தழல், தட்டையையும், தனது மேனிக்கு நிகரான இளந்தழைகள் தனக்கேற்ற உடையாமென்றுசொல்லி முறியையும் அடிக்கடிவந்துதந்து அன்பு காட்டி வஞ்சித்தான் என்றாள் என்க. பாவினி - 'பாவியினி' என்பதின் விகாரம் போலும்.

கூவன் மைந்தனார்] 224 [பாலை

தலைவனது பிரிவிடைத் தான் இறந்து படுவளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் உரைத்தது.

கவலை யாத்த அவல நீளிடைச்
சென்றோர் கொடுமை யேற்றித் துஞ்சா
நோயினும் நோயா கின்றே; கூவற்
குராலான் படுதுய ரிரவிற் கண்ட
உயர்திணை யூமன் போலத்
துயர்பொறுக் கல்லேன், தோழி, நோய்க்கே.

(உரை). கவர்த்த பலவழிகள் மிடைந்ததும், பள்ளங்களை உடையதுமான நீண்ட சுரத்திடை (நம்மைப் பிரிந்து) அகன்றவர்தம் கொடுமையை நினைந்து தூங்காதிருக்கும் நோயினும் (அவர் சென்ற காட்டிடை அவருக்கு நேருந் தீங்கை நினைத்துக் கவன்று வருந்தும்) நோய்மிகுகின்றது; (இவ்விருவகை நோயாலும் உண்டாகுந் துயரத்தை)நான், கூவும் கூகையின் குழறலால் நேருந் துயரை இரவில் உணர்ந்த ஒரு மேற்குலத்தூமையனைப் போலப் (பிறர்க்குச் சொல்லி அதனைப் போக்க மாட்டாதவளும்) பொறுக்க மாட்டாதவளும் ஆயினேன், தோழி.

கவலை - பல கிளையாகப் பிரியும் வழி. அவல் - பள்ளம்; அவல - பள்ளங்களையுடைய. கூவல் - கூவுதல். குரால் - கூகை, பேராந்தை. கூகை குழறுதல் துன்னிமித்தமாதலைச் "சாவோர்ப் பயிருங் கூகையின் குராலும்" (மணிமேகலை-சக்கரவாள - 75) என்பதால் ஓர்க. 'கூவற்........கண்ட' என்பதற்குக் 'கிணற்றில் விழுந்த பசப்படுந்துயரத்தைக் கண்ட' என்று உரைப்பாரும் உளர். நோய்க்கு - நோயின் பொருட்டு, நோயால்.

கபிலர்] 225 [குறிஞ்சி

வரைவிடைவைத்துப் பிரியலுற்ற தலைமகனுக்குத் தோழி சொல்லியது.

கன்றுதன் பயமுலை மாந்த முன்றில்
தினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட,
கெட்டிடத் துவந்த வுதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்தனை யாயின், மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்ன இவள்
ஒலிமென் கூந்தல் உரியவா நினக்கே.

(உரை). கன்று தன்முலைப்பாலை உண்ணப் பெண்யானை குறவர் குறிச்சியில் மனையின் முன்பக்கத்தில் உலரவைத்த தினையை உண்ணும் பெரிய குன்றுகளையுடைய மலைநாடா, தனக்குக் கேடுண்டான காலத்தில் ஒருவன் மனமுவந்து புரிந்த உதவியைத் தான் நலம்பெறச் சிங்காதனத்தில் வீற்றிருக்குங் காலத்தில் மறந்த மன்னனைப் போல நீ, நான் இவளை உன்னோடுகூட்டிவைத்த பேருதவியை மறந்திடுவையாயின்,மென்மைபொருந்திய அழகுசிறந்த செருக்கிய மயிலின் தோகையைப் போன்ற இவளது தழைத்த மெல்லிய கூந்தலைக் கோதுவதே உனக்குரிய செய்கையாம்.

பயம் - பால். உதவி - உதவியை. கட்டில் - சிங்காதனம்; 'அரசு கட்டில்' என்றும் வழங்கும். கலி - செருக்கு. ஒலி - ஒலித்தல், தழைத்தல். கூந்தல் - (ஆகுபெயர்) கூந்தலை நீவுதல், கோதுதல். இது பிணங்கிய மகளிரை ஊடலுணர்த்தி நயப்பிக்குமாறு காதலர் புரியும் செயல்களிலொன்று. 'ஒலிமென் கூந்தல் உரியவாம் நினக்கே' என்றது 'நீ தலைமகளைக் கூடிப் பெறும் இன்பத்தை எளிதிற் பெறாய்' என்று கடிந்து கூறியதாம்.

18912

மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனார் } 236 { நெய்தல்

வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிந்த தலைமகனது பிரிவு நீட்டித்தவிடத்துத் தான் ஆற்றாளெனக்கவன்ற தோழிக்குத் தலைமகள் உரைத்தது.

பூவொடு புரையுங் கண்ணும், வேயென
விறல்வனப் பெய்திய தோளும், பிறையென
மதிமயக் குறாஉ நுதலும், நன்று
நல்லமன், வாழி தோழி, அல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே.

(உரை). அசைந்தலவுந் திரைகள் தினந்தோறும் வந்து மோதும் தாழையின் வெள்ளியபூ நாரையென்று கண்டார் மருளும்படி மலரும் பெருந்துறைக் கடற்சேர்ப்பனுடன் கூடி நான் மகிழாதிருந்த முந்தைக் காலத்தில் பூவையொத்த எனது கண்ணும், மூங்கிலைப்போலச் சிறந்த அழகைக் கொண்ட எனது தோளும், கண்டார் என்னுட் பிறையென்று கருதும்படி அவர் மதியை மருட்டிய எனது நெற்றியும், அழகு மிக்கு மிகவும் நல்லனவாய் இருந்தன. (இப்பொழுது அவை அவனுடைய அன்பற்ற புணர்ச்சியாலும் பிரிவாலும் அழகுகுன்றிப் பொலிவழிந்து கெட்டுவிட்டன).

விறல் - வெற்றி; விறல் வனப்பு - தோள்கள்பிறவற்றின் வனப்பை வெல்லும் தம்வனப்பு. மதிமயக்குறூஉம் - மதியை மயக்குறுத்தும். நன்று - மிகவும். தயங்குதல் - அசைதல்; விளங்குதல் என்றுமாம். நகுதல் - நகுதற்குக் காரணத்தைக் காரியமாகக் கூறிய உபசார வழக்கு வெங்கு- தலைவனைத் தான் எதிர்ப்பட்டதற்கு மூர்த்தியகாலம்;

ஓதிஞானியார்] 227 [நெய்தல்

வரையாது வந்தொழுகுந் தலைமகன் சிறைப்புறத்தானாக அவன் கேட்குமாறு தலைமகன் தோழிக்குச் சொல்லியது.

பூவளைந் தன்ன பொலஞ்சூட்டு நேமி
வாண்முகந் துமிப்ப வள்ளிதழ் குறைந்த
கூழை நெய்தலும் உடைத்திவண்
தேரோன் போகிய கான லானே.

(உரை). காதலர் தேரூர்ந்து சென்ற கானலின்கண்ணதாகிய இவ்விடம், தாமரைப் பூவை வளைத்தாற்போன்ற அத்தேரின் அழகிய வட்டைகள் பொருந்திய உருளை ஒளிபொருந்திய தமது முகத்தைத் துமித்துச் சென்றதால் அகன்ற தமிதழ்கள் அறுபட்டுக் கூழையாகிய நெய்தற் பூக்களையும் உடைத்தாய் இருக்கின்றது.

பூ - இதழ் விரிந்த பொகுட்டுத்தாமரைப் பூவைப்போல ஆரக்கால்கள் பொருத்தப் பெற்ற உருளையின் குறடு. 'சூட்டு' என்பது ஆரக்கால்களைச் சேர்த்துப் பிணிக்கும்படி அவற்றின் விளிம்பிலே பொருத்தும் வளைந்த துண்டுகள்; இவற்றை இக்காலத்து 'வட்டை' என்ப. குறடு, ஆரம், சூட்டு இவை உருளையின் உறப்புக்கள். இதனை,

உருவ வாண்மதி மலர்கொண் டாங்குக்
கூருளி பொருத வடுவாய் நேமியொடு
டாரஞ் சூழ்ந்த அயில்வாய் நேமியொடு.
(சிறுபாண் - 251 - 253)

கொழுஞ்சுட் டருந்திய திருந்துநிலை யாரத்து
முழவி னன்ன முழுமர உருளி
(பெரும்பா - 46, 47)

என்ற பத்துப்பாட் டடிகளின் நச்சினார்க்கினியர் உரையால் தெளிக. இதற்குப் 'பூ வளைந்தாற் போன்ற உச்சிக்கொண்டையை உடைய நேமிப்புள்ளின் மூக்குத் துணிப்ப' என்று பொருந்தாப் பொருள்கூறி இடர்ப்படுவாருமுளர். 'நெய்தலும் உடைத்து' என்ற உம்மை, அவனுடைய களவுப் புணர்ச்சியால் தனது கன்னித்தன்மையும், காமநெறியும், உறப்பு நலனுமிழந்து நிலைகெட்ட தன்னையும், உடைத்து என்பதைக் குறித்துவந்த எச்சவும்மை, வாண்முகம்பட. நெய்தலின் ஒளிபொருந்திய முகம், 'நேமியின் வாண் முகம்; அதாவது உருளையின் வாள்போலக் கூரிய கட்டமைந்த மேற்புறம் என்றுமாம்.

செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தனார்] 228 [நெய்தல்

'தலைவனது நெடும்பிரிவிடை 'நீ நன்கு ஆற்றியிருந்தாய்' என்று தன்னைப் புகழ்ந்த தோழிக்குத் தலைவி உரைத்தது.

வீழ்தாழ் தாழை யூழுறு கொழுமுகை
குருகுள ரிடத்தின் விரிபுதோ டவிழுங்
கான நண்ணிய சிறுகுடி முன்றில்
திரைவந்து பெயரும் மென்பதந் துறந்து
நெடுஞ்சே ணாட்டா ராயினும்
நெஞ்சிற் கணியரே தண்கட ணாட்டே.

(உரை). விழுதுகள் தாழ்ந்த தாழையின் முதிர்ந்த கொழுத்த முகை நாரைகளிருந்து தமது சிறகுகளைக்கோதும் இடத்தில் இதழ்கள் விரிந்து மலரும் கானலைச்சார்ந்த [illegible] சிறுகுடிசைகளின் முன்பக்கத்தில் திரை வந்து மோதிப் பெயரும் நெய்தனிலப்பரப்பாகிய குளிர்ந்த கடனாட்டைத் துறந்து காதலர் நெடுந்தூரத்தேயுள்ளதோர் நாட்டிலிருப்பினும் எனது நெஞ்சினுக்கு அணியராகவே இருக்கின்றார். (அதனாலன்றோ நான் இதுகாறும் ஆற்றியிருந்தேன்காண்?).

விரிபு - விரிந்து. தோடு அவிழ்பு விரியும் என மாற்றுக. மென்பதம் - மென்புலம், நெய்தனிலம். பதம் - இடம். கடனாட்டுமென்பதம், மென்பதமாகிய கடல்நாடு, எனக் கூட்டிக்கொள்க.

மோதாசனார்] 229 [பாலை

உடன்போக்கின்கண் தலைமகளையுந் தலைமகனையும் இடைச்சுரத்துக் கண்டார் தம்முள்ளே கூறியது.

இவனிவ ளைம்பால் பற்றவும், இவளிவன்
புன்றலை யோரி வாங்குநள் பரியவும்,
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிரா
தேதில் சிறுசெரு உறுப மன்னோ ;
நல்லைமன் றம்ம, பாலே, மெல்லியல்
துணைமலர்ப் பிணைய லன்னவிவர்
மணமகி ழியற்கை காட்டி யோயே.

(உரை). இவன் இவளுடைய கூந்தலைப்பற்றவும், இவள் இவனுடைய புன்றலையின் மயிரைப் பிடித்தவளாய் அன்பு கூரவும், இவளிடத்துக் காதலுற்ற தமக்கை முறையினராகிய பாங்கியர் தடுப்பவுந்தவிராது இவர்கள் இனிக் காரணமில்லாத புலவிநுணுக்கத்தால் உளதாம் சிறுபூசலாகிய ஊடலின்பத்தை உறுவார்கள். பால்வரை தெய்வமே, மெல்லிய தன்மையையுடைய மலர்களிரண்டைச் சேர்த்துத்தொடுத்த மாலையைப்போன்ற இவர்களுடைய மகிழும் மணவியற்கையைக் காட்டிய நீ, நிச்சயமாக, மிகவும் நல்லை.

ஓரி - ஆண்மயிர், குஞ்சி. 'செவிலி' தமக்கையாதலை 'முன்பிறந்தாளுங் கோடாயும் செவிலி' என்ற பிங்கலந்தைச் சூத்திரத்தால் அறிக. இங்கே 'செவிலித்தாயர்' என்றுரைத்தல் பொருந்தாது, தலைவனுடன் தலைவி ஊடுங்காலத்து நடுநின்று அவர் பிணக்கைத் தவிர்த்தல் அவர்க்குரிய தொழிலன்மையின். பரியவும் - வருந்தவும் என்றுமாம். ஏதில் - ஏதுஇல்; ஏது, தக்ககாரணம். 'ஏது' என்பது 'ஹேது' என்னும் வடமொழித் திரிபாய்க் குற்றியலுகரவீறன்மையின் 'ஏதுவில்' என்றிருக்கற்பாலது 'ஏதில்' என நின்றது செய்யுள் விகாரம். மன்றம்ம - (விகாரம்)மன்ற அம்ம. 'சிறுபூசல்' என்றது 'புலவி நுணுக்கம்' அதாவது, 'தலைமகன் மாட்டுத் தவறிலவாயினும், தன் காதல் மிகுதியால் சொல்லெச்சத்தினும்,குறிப்பெச்சத்தினும் வேறுபடப் பொருள்கொண்டு தலைமகன் புலத்தல்' (திருக்குறள், மணக்குடவருரை). பாலே - விளி. பால் - ஊழ்; பழவினை; இங்குப் 'பால்வரை தெய்வம்' அதாவது, எல்லார்க்கும் இன்பதுன்பத்துக் காரணமான இருவினையையும் வகுக்குந் தெய்வம்.

அறிவுடைநம்பியார்] 230 [நெய்தல்

தன்னைக் குறையிரந்த தலைமகனுக்குக் குறைநேர்ந்த தோழி வன்மொழி கூறித் தலைமகளைக் குறைநயப்பித்தது.

அம்ம வாழி தோழி, கொண்கன்
தானது துணிகுவன் அல்லன்; யானென்
பேதை மையாற் பெறுதகை கெழுமி
நோதகச் செய்தநொன் றுடையன் கொல்லோ,
வயச்சுறா வழங்கு நீர்த்தவண்
சின்னாள் இன்ன வரவறி யானே.

(உரை). வாழி தோழி, நான் சொல்லும் இதனைக்கேட்பாயாக. நெய்தனிலத்தலைவனான அவன் இவ்வளவுநாள் இங்கு வாராதிருப்பதற்குத் துணிபவன் அல்லன். நான்

அவனாலே இரக்கத்தக்க தன்மையைப் பொருந்தி எனது மிக்க அறியாமையால் அவனது மனம் நோகும்படிசெய்ததொன்றை அவன் மனதிற்கொண்டிட்டான் கொல்லோ? வலிய சுறாமீன்கள் சஞ்சரிக்கும் நீர்நிலைகளை உடைய அவ்வழியாகச் சில நாளாக அவன் இங்கே வரவொழிந்தான். (அதன் காரணம் யாதோ யான் அறியேன்.)

பெறுதகை - என்னையிரந்து என்னால் உன்னைப் பெறுந்தகைமை. கெழுமி - பொருந்தி. நோதகச்செய்தது - நான்குறை மறுத்தலால் மடலேறுதல், வரைபாய்தலாகிய கொடிய துன்பச்செயல்களை அவன் மேற்கொள்ளும்படி செய்தது. இன்ன-இப்படி. இவ்விடத்து. 'நீர்த்தவ' என்றும் பாடம்.

பாலைபாடிய பெருங்கடுங்கோ]231 [மருதம்

பரத்தையிற் பிரிந்து மீளலுற்ற தலைவனுக்கு வாயிலாய்ப் புக்க தோழிக்குத் தலைவி கூறியது.

ஒரூர் வாழினு சேரி வாரார்;
சேரி வரினும் ஆர முயங்கார்
ஏதி லாளர்; சுடலை போலக்
காணக் கழிப மன்னே; நாணட
நல்லறி வழிந்த காமம்
வில்லுமிழ் கணையிற் சென்றுசேட் படவே.

(உரை). அன்பின்றி அயலாராகிய தலைவர் ஒரூரிலே இருக்கின்றாராயினும் பரத்தையர் சேரியைவிட்டு இங்கு வாரார்; ஒருகால் சேரியினின்று வந்தாலும் என்னை மனமாரத்தழுவிக் கூடார்; சுடுகாட்டின் வழியே செல்வோர் அதைக்கண்ணுற் பாராமல் செல்வதுபோல (இவ்வழியே வந்தாலும் நானிருக்கும் மனையைப் பாராது, அருவருத்துக் கழிவர். நாணம் வருத்துவதினாலே எனது நல்லறிவை அழித்த காமம், வில்லினின்றும் விடுபட்ட அம்பைப் போலத்தூரத்தே சென்று படுவதாகக்கடவது.

சேரி - சேரியின் (ஐந்தாம் வேற்றுமைத்தொகை). ஆர- மெய்யார, மனமார. ஏதிலாளர், எழுவாய், வாரார், முயங்கார், பயனிலை. 'வில்லுமிழ் கணையைப்போலத் தனது காமம் தூரத்திலேயுள்ள பரத்தைமனையில் உலுறையும் தலைவனைச் சென்றுதாக்கி அவனைத்தன் வசப்படுத்துவதாக' என்று தலைவி விரும்பிய வாறும். 'ஒரூஉ வாழினும்', 'நல்லறிவிழந்தகாமம்' 'காணிட,' என்பன பாடாந்தரம்.

ஊண்பித்தையார்] 232 [பாலை

பிரிவிடை ஆற்றாது வருந்திய தலைமகன் தோழிக்குச் சொல்லியது.

உள்ளார் கொல்லோ, தோழி; உள்ளியும்
வாய்ப்புணர் வின்மையின் வாரார் கொல்லோ;
வறற்புகா வருந்திய மாவெருத் திரலை
உரற்கால் யானை ஒடித்துண் டெஞ்சிய
யாஅ வரிநிழற் றுஞ்சும்
மாயிருஞ் சோலை மலையிறந் தோரே.

(உரை). நீரற்ற சுரத்திற் புகுந்து வருந்திய அழகிய கழுத்தையுடைய மான் உரல்போன்ற கால்களையுடைய யானை கிளைகளை முறித்துண்டுவிட்ட யாமரத்தின் செறியாத நிழலில் துயில் கொள்ளும் பெரிய சோலைகளையுடைய மலையைக்கடந்து சென்ற தலைவர், தோழி, நம்மை நினைத்திலரோ, அல்லது நினைத்தும் வருவதற்கியலாமையின் வந்திலரோ?

வாய்ப்பு - வசதி, ஸௌகரியம். உணர்வு இன்மையின் - அறியாமையின். வறன் - வறம், வறுமை, நீர் வறுமையுற்ற, அதாவது, நீரற்றதன்மை; இது ஆகுபெயராய் வற்கடமாகிய பஞ்சகாலத்தையும், நீர்வறந்த இடமாகிய சுரத்தையும் குறிக்கும்; இங்கு நீரற்ற சுரம்: 'வறன் நீந்தி நீ சென்ற நீளிடை' 'வறனுழு நாஞ்சில்', என்பன பாலைக் கலி (3, 8). மா - அழகு. எருத்து - கழுத்தின்மேற்புறம். யா - ஒரு மரம். வரிநிழல்-செறியாது இடைவெளிகளையுடைய கோடு கோடாப்பரந்த நிழல். 'சுரன்முதன் மராஅத்த வரிநிழல்' (சிறுபாண் - 12) 'கருங்கால் யாஅத்த வரிநிழல்' (ஐங்குறு. 388) என்றார் பிறரும்.

பேயனார்] 233 [முல்லை

அலரெழுந்த பின்னர் வரைவிடைவைத்துப் பிரிந்து பொருள் முற்றி மீளுந் தலைமகன் தனது தேர்ப்பாகனுக்குச் சொல்லியது.

கவலை கெண்டிய கல்வாய்ச் சிறுகுழி
கொன்றை யொள்வீ தாஅய்ச் செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன
காரெதிர் புறவி னதுவே, உயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும்
வரைகொள வறியாச் சொன்றி
நிரைகோற் குறுந்தொடி தந்தை யூரே.

(உரை) மேலோர்க்கு நீர்வார்த்துக்கொடுத்த பொருளின் மிச்சம் மற்றையோர்க்கெல்லாம் அளவிடலாகாத உணவை அளிக்கத்தக்க (செல்வமிகுந்த) வரிசையான அழகிய குறுகிய வளையல்களையணிந்த தலைமகளின் தந்தையினூர், கவலையின் கிழங்கை அகழ்ந்தெடுத்த பாறையினிடத்துச் சிறுகுழிகள் கார்ப்பருவத்தை எதிர்ந்து பூத்த கொன்றையின் ஒள்ளிய மலர்கள் பரந்து செல்வர்தம் பொன்னணிகள்வைத்த பெட்டிகள் மூடிதிறந்தவற்றைப் போலத்தோன்றும், அதோத் தெரிகிறதே, அந்த முல்லை வைப்பின் இடையதே. (நீ கடுகத்தேரை கடாவுவாயாக.)

கவலை - குறவருக்கு உணவாகும் ஒருவகைக் கிழங்கை ஈனுங்கொடி. கல் - கற்பாறை. தாஅய் - பரந்து, படிந்து. மூய் - மேல்மூடி; 'மூடிவேவா நின்ற கலத்தைமூய் திறந்தவிடத்து' என்பது இறையனாரகப்பொருள் உரை. புறவு- முல்லைநிலம். சொன்றி - சோறு. கோல் - 'கோலய' என்பதன் குறை; 'திரட்சி' என்றுமாம். குறுந்தொடி - அன்மொழித்தொகை.

மிளைப்பெருங்கந்தனார்] 234 [முல்லை

கார்ப்பருவ வரவின்கண் மாலைப்பொழுதிற் பிரிவாற்றாது வருந்திய தலைவி தோழிக்குச் சொல்லியது.

சுடர்செல் வானஞ் சேப்பப் படர்கூர்ந்
தெல்லுறு பொழுதின் முல்லை மலரும்;
மாலை யென்மனார் மயங்கி யோரே;
குடுமிக் கோழி நெடுநக ரியம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை,
பகலும் மாலை துணையி லோர்க்கே.

(உரை). கார்காலத்தில் சூரியனகன்ற வானம் செவக்க வருத்தத்தை மிகுவிப்பதாகிய இரவுவந்தணுகும்பொழுதில் முல்லையரும்புகள் மலரும்; அந்தப்பொழுதை மாலையோ மென்று சொல்லுவர் அறிவு மயங்கியவர்கள். துணைவரைப் பிரிந்து தனித்துறைபவருக்கு செஞ்சூட்டுவாரணம் கூவி நெடிய நகரத்து மக்களைத் துயிலெழுப்பும் விடியற்காலமும் மாலையே, பகற்பொழுதும் மாலையே.

சுடர் -சூரியன் எல் - எல்லி, இராக்காலம். பொழுதின் - பொழுதினை. துணைபிரிந்தார்க்குத் துன்பம் புரிதலில் மாலையை மற்றைப்பொழுதுகளும்ஒத்தலின்.மயங்கியோரே முல்லைமலரும் பொழுதை மாலை என்பர், துணைபிரிந்தோர்க்கு விடியலும் மாலை, பகலும் மாலை என்பதை அறியாராய் என்றான். குடுமி - உச்சிக்கொண்டை. நகர் -

ஆகுபெயர்) நகரமாந்தர். இயம்பும் - துயிலெழுப்பக்கூவும். புலர்விடியல் - இருள்புலரும் பொழுதாகிய விடியற்காலம். துணை - காதலராகிய துணைவர்.

மாயேண்டன்] 235 [பாலை

வரைவிடைப் பிரிந்து பொருள்முற்றி மீளலுற்ற தலைமகன் வாடைக்காற்றுக்குஉரைப்பானாய்த் தேர்ப்பாகனுக்கு உரைத்தது.

ஓம்புமதி வாழியோ வாடை; பாம்பின்
தூங்குதோல் கடுக்குந் தூவெள் ளருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே, நெல்லி
மரையினம் ஆரு முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோ ளூரே.

(உரை). மரக்கிளையில் துவக்குண்டு தொங்கும் மலைப் பாம்பின் சட்டையை ஒக்கும் மிகவும் வெள்ளிய அருவியையுடைய மலையினுச்சியிற் பொருந்திய (அதோத் தெரிகின்றதே) அந்த ஊர்தான், மரைமானினம் நெல்லிப்பழைத்தை உண்ணும் முன்றிலையும் புல்லால் வேயப்பட்ட கூரையையுமுடைய குரம்பைகள் செறிந்த எனது காதலியின் ஊர்; வாடையே, நான் செல்லுமுன் நீ அங்கே சென்று அவளை வருத்துதலைத் தவிர்த்திடு.

ஓம்புமதி - தவிர்த்திடு; மதி-ஒருமுன்னிலை அசைச்சொல். வாடை - குளிர்காற்று. கல்-மலை. உயர் - உயர்தல், உயர்ந்த இடம், உச்சி. நண்ணியது - (விகாரம்) நண்ணிய அது. நெல்லி - நெல்லியை. ஆரும் - உண்ணும். குரம்பை- குடில்; 'குன்றக் குறவன் புல்வேய் குரம்பை' (ஐங்குறு. 252) என்றார் பிறரும். நல்லோள் - நல்லாள்; குணத்தாலும், எழிலாலும், பருவத்தாலும் நல்லாள்.

தமிழ்ப் பாடம் 141.

[773-வது பக்கத் தொடர்ச்சி]

நைடதம்—நளன் தூதுப் படலம்

பற்றிய காமத் தீயாற்
பைம்பொனாட் டமரர்க் கெல்லாங்
கொற்றவன் வருந்தா வண்ணங்
கொய்துகொய் தணையிற் சேர்த்தே
யுற்றவர் வறுமை தீர்க்கு
முயர்சினைத் தருக்க ளைந்து
நற்றளி ரின்மை யாகி
நல்குர வடைந்த மாதோ. 62.

உரை:—பை - பசுமையான, பொன்நாடு - பொன்னுலகத்திலுள்ள, அமரர்க்கு எல்லாம் - எல்லாத் தேவர்களுக்கும், கொற்றவன் - தலைவனான இந்திரன், பற்றிய - பற்றிக்கொண்ட, காமம் தீயால் - காமமாகிய நெருப்பினால், வருந்தா வண்ணம் - வருந்ாதபடி, கொய்து கொய்து - பறித்துப் பறித்து, அணையில் சேர்த்தே - அவன் படுக்கையில் பரப்பியதினாலேயே,

உற்றவர் - தன்னை யடைந்தவர்களது, வறுமை - தரித்திரத்தை, தீர்க்கும் - நீக்குகின்ற, உயர் - உயர்ந்த, சினை - கிளைகளையுடைய, தருக்கள் ஐந்தும் - ஐந்து தருக்களும், நல்தளிர் இன்மையாகி - நல்ல தளிர் இல்லாதவைகள் ஆகி, நல்குரவு அடைந்த - தரித்திரமடைந்து விட்டன (மாதோ—அசை)—என்று நளன் தமயந்திக்குக் கூறினான்.

விரிவுரை :— இந்திரன் தமயந்தியின்பொருட்டு அடைந்துள்ள காமவெப்பம் தணியும்வண்ணம் அவனுக்குச் சீதளோபசாரங்கள் செய்பவர், ஐந்து தருக்களின் தளிர்கள் முழுவதையும் பறித்துப்பறித்து அவனுடைய படுக்கையில்சேர்ப்பதால், மற்றவர் வறுமையைத் தீர்க்கும் அத்தருக்கள் இலையும் தளிரும் இல்லாத தரித்திரத்தை இப்பொழுது தாமே எய்தி விட்டன, என்பது இச்செய்யுளின் பொருள். "உன்னைத் தேவர்கள் அதிகங் காதலிப்பதால் நீ அவர்களை மணத்தல் வேண்டும்" எனத் தமயந்தியை நளன் வற்புறுத்தியவாறு இது.

குறிப்பு:—பற்றிய + காமம் = பற்றிய காமம்:—நிலைமொழி பெயரெச்சமாதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. ( )

காமம் + தீயால் = காமத்தீயால்:— காமமாகிய தீயால் எனவிரியும் இத்தொடர் பண்புத்தொகையாகையால் நிலைமொழியீற்று மகரமெய் கெட்டது.( ) பின், வருமொழி முதலில் வந்துள்ள வல்லினமெய் மிகுந்தது. ( )

தீ + ஆல் = தீயால்:—ஆல் என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு, அதன்முன் இருக்கின்ற ஈகார உயிருடன் புணரும்போது, யகர உடன்படுமெய் பெற்றது. ( )

தீயால் + பை = தீயாற்பை :— இன்னும் விதி கூறவில்லை.

பசுமை + பொன் = பைம்பொன்:— இன்னும் விதி கூறவில்லை.

பொன் + நாடு = பொனாடு :— இன்னும் விதி கூறவில்லை.

நாடு + அமரர்க்கு = நாட்டு + அமரர்க்கு = நாட்டமரர்க்கு :—நிலைமொழியீறு குற்றியலுகரமாதலால், வருமொழி முதலில் உயிர்வர, அக் குற்றியலுகரம் கெட்டுநின்ற மெய்யின்மேல் அவ்வுயிர் ஏறிப் புணர்ந்தது ( ). மேலும் அந் நிலைமொழி டகர மெய்யின்மேல் ஏறிய நெடிற்றொடர்க் குற்றியலுகரமா யிருப்பதால் நாட்டு என அக்குற்றியலுகரம் ஏறியிருக்கும் டகரமெய் விரிந்தது. ( )

அமரர்க்கு + எல்லாம் = அமரர்க் கெல்லாம் :—நிலைமொழியீற்றுக் குற்றியலுகரங் கெட்டுநின்ற மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறிப் புணர்ந்தது. ( )

எல்லாம் + கொற்றவன் = எல்லாங் கொற்றவன்:-வருமொழி முதலில் வல்லினமெய் வர, நிலைமொழியீற்று மகரமெய் அதற்கு இனமான ஙகர மெய்யாய்த் திரிந்தது.

கொற்றவன் + வருந்தா = கொற்றவன் வருந்தா :— யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணர்ந்தது. இதற்கு விதி இன்னுங் கூறவில்லை.

வருந்தா + வண்ணம் = வருந்தாவண்ணம்:—நிலைமொழி யிறுதியில் உயிரும் வருமொழிமுதலில் இடையின மெய்யும்நிற்க அவை இயல்பாய்ப் புணர்ந்தன. ( )

வண்ணம் + கொய்து = வண்ணங் கொய்து:—நிலைமொழி யீற்று மகரமெய் வருமொழிமுதல் வல்லினம் மெய்க்கு இனமாய்த் திரிந்தது. ( )

கொய்து + கொய்து = கொய்து கொய்து:—நிலைமொழி குற்றியலுகர வீற்றுப் பெயரெச்சமாயினும், அது இடைத்தொடர்க் குற்றியலுகரமாதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. ( )

கொய்து + அணையில் = கொய்தணையில்:—வருமொழி முதலில் உயிர் வர, நிலைமொழியீற்றுக் குற்றியலுகரங் கெட்டது. கெட்டுநின்ற மெய்யின்மேல் அவ்வுயிர் ஏறியது. ( ).

அணை + இல் = அணையில்:—அணையென்பது ஐகாரத்தை ஈற்றிலுடைய தாதலால், அதனோடு இல் என்னும் ஏழாம்வேற்றுமை உருபு சேர்கின்றபோது, யகர உடன்படுமெய் வந்தது. ( )

அணையில் + சேர்த்தே = அணையிற் சேர்த்தே :—நிலைமொழியீற்று லகரமெய், வருமொழி முதலில் வல்லினம் வர, றகரமாய்த் திரிந்ததற்கு விதி இன்னுங் கூறவில்லை.

சேர்த்தே + உற்றவர் = சேர்த்தே யுற்றவர் :—ஏகார இடைச்சொல்லிற்குப்பின் உயிர்வர யகர உடன்படுமெய் வந்தது. ( ).

உற்றவர் + வறுமை .—நிலைமொழி யீற்றில் ரகரமெய் இருப்பினும், வருமொழி முதலில் இடையினமெய் வந்திருப்பதால் அவை இயல்பாய்ப் புணர்ந்தன. ( )

வறுமை + தீர்க்கும் = வறுமைதீர்க்கும்:—இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.

தீர்க்கும் + உயர் = தீர்க்குமுயர் :— நிலைமொழி யீற்று மெய்யோடு வருமொழி முதல்உயிர் சேர்ந்து உயிர்மெய் ஆயிற்று. ( ).

உயர் + சினை = உயர்சினை :—இது வினைத்தொகையாகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. ( )

சினை + தருக்கள் = சினைத்தருக்கள் (சினைகளை உடைய தருக்கள்):—இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது. ( )

தருக்கள் + ஐந்தும் = தருக்களைந்தும் :— நிலைமொழி யீற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. ( )

ஐந்தும் + நற்றளிர் = ஐந்துநற்றளிர் :—வருமொழி முதலில் மெல்லினமெய் வர, நிலைமொழியீற்று மகரமெய் கெட்டது. ( )

நன்மை + தளிர் = நல் + தளிர் = நற்றளிர் :— இதற்கு இன்னும் விதி கூறவில்லை.

தளிர் + இன்மை = தளிரின்மை :—வருமொழி முதல் உயிர், நிலைமொழி யீற்றுமெய்யின்மேல் ஏறியது. ( )

இன்மை + ஆகி = இன்மையாகி :—நிலைமொழியீற்று ஐகார உயிரோடு வருமொழிமுதல் உயிர், யகர உடன்படுமெய் பெற்றுப் புணர்ந்தது. ( )

ஆகி + நல்குரவு = ஆகிநல்குரவு :— வருமொழிமுதல் மெல்லினமெய் நிலைமொழியீற்று உயிரோடு இயல்பாய்ப் புணர்ந்தது. ( )

நல்குரவு + அடைந்த = நல்குரவடைந்த:—நிலைமொழி யின்யீற்றிலிருப்பது முற்றியலுகரமானாலும், அது வகரமெய்யின்மேல் ஏறியிருப்பதால், வருமொழி முதலில் உயிர் வர, அம் முற்றியலுகரம் குற்றியலுகரத்தைப்போல் கெட்டு, அது நின்ற மெய் யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறலாயிற்று. (.)

அடைந்த + மாதோ = அடைந்தமாதோ:—வருமொழி முதல் மெல்லினமெய் நிலைமொழியீற்று உயிரோடு இயல்பாய்ப் புணர்ந்தது. ( )

கடிமலர்க் கூந்த னின்மேற்
காதன்மீ தூர நின்ற
வடுதொழிற் கூற்று மஞ்ச
வடர்கின்ற னனங்கன் வெய்ய
வடவையோ டிகலு முந்நீர்க்
கிறையையும் வருத்தி யாவுஞ்
சுடுதழற் கடவுண் மீதுஞ்
சுட்டது காமத் தீயே. 63

உரை :—கடி - வாசனை பொருந்திய, மலர் - மலர்களை அணிந்த, கூந்தல்-கூந்தலையுடைய தமயந்தியே, நின்மேல் - உன்மீது, காதல் - ஆசை, மீதூரநின்ற - அதிகரித்து நிற்கின்ற, அடுதொழில் - கொல்வதே தொழிலாக உள்ள, கூற்றும் - யமனும், அஞ்ச - நடுங்கும்படி, அனங்கன் - மன்மதன், அடர்கின்றான் - அவனை நெருங்குகின்றான். காமத் தீ - காமாக்கினியானது, வெய்ய - வெப்பமுடைய, வடவையோடு, வடவைத்தீயுடன், இகலும் - மாறுகொண்ட, முந்நீர்க்கு - கடலுக்கு, இறையையும் - தலைவனாகிய வருணனையும், வருத்தி - துன்பப்படுத்தி; யாவும் - எல்லாவற்றையும், சுடு - சுடுகின்ற, தழல் கடவுள் மீதும் - அக்கினி தேவன் மேலும், சுட்டது-சுட்டுவிட்டது. (என்று நளன் கூறினான்).

விரிவுரை :—காமத்தால் இந்திரன் படுகின்ற அவத்தையை முன்செய்யுளில் கூறிய நளன், இச்செய்யுளில், யமன் வருணன் அக்கினி ஆய மூன்று தேவர்களும் படுகின்ற அவத்தையைக் காட்டுகின்றான். "எல்லாரையுங் கொல்கின்ற யமனோ, இப்பொழுது, உருவமில்லா மன்மதன் அருகு நெருங்கினாலே பயப்படும்படி முடிந்தது. வடவாமுகாக்கினியை எதிர்த்துத் தாக்குகின்ற கடலின் கடவுள் இப்பொழுது காமக்கனலைத் தாங்கமுடியவில்லை. எல்லாவற்றையுஞ் சுட்டெரிக்கவல்ல அனற்கடவுளையே சுட்டதென்றால் இக் காமத்தீயின் வெப்பத்தை விளம்பக்கூடுமோ! ஆதலின் அன்னவர் தாபத்தைத்தணித்து நீ அருளல்வேண்டும்" என நளன் தமயந்தியைத் தூண்டியவாறும் இது.

குறிப்பு:—மலர்க்கூந்தல்—மலர்களை அணிந்த கூந்தலை உடையவள், என விரியுமாதலால் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. ( ) அது இங்கு விளித்தல் பொருளுடைய எட்டாம் வேற்றுமையை அடைந்திருக்கின்றது.

கூற்றும், என்பதிலுள்ள உம்மை, உயர்வுசிறப்போடு எதிரதுதழுவிய எச்சப்பொருளும் உடையது.

அவ்வாறே இறையையும் என்பதிலுள்ள உம்மை உயர்வுசிறப்போடு இறந்தது தழுவிய எச்சப்பொருளையும் உடையது (   ).

அடுதொழில் :—வினைத்தொகை; வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. சுடுதழல், என்பதும் அவ்வாறே.

சுட்டது காமத்தீ - வினைமுற்றுத்தொடராகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.(   )

—

முருக்கித ழணங்க னைய்நின்
முகிழ்முலை வேட்ட ஞான்றே
செருக்கிள ரனங்கன் வாளிச்
செழுமலர் வருத்த வாடி
இருத்தலாற் பழிச்சு கின்றோர்
ஏடவிழ் நறிய போதா
லருச்சனை புரியுந் தோறு
மஞ்சுவ ரமரர் மாதோ. 64

உரை :—முருக்கு - முருக்கமலரைப் போன்ற, இதழ் - உதடுகளையுடைய, அணங்கு அன்னாய் - தெய்வப்பெண்போன்ற தமயந்தியே—,நின் - உன்னுடைய, முகிழ் - குவிந்த, முலை-முலைகளை, வேட்ட ஞான்றே - விரும்பின பொழுதே, செரு - போரை, கிளர் - மிகுதியாகச் செய்கின்ற, அனங்கன் - மன்மதனுடைய, வாளி - பாணங்களாகிய, செழு - செழுமையான, மலர் - மலர்கள், வருத்த - வருத்த, அமரர் - தேவர்கள், வாடி இருத்தலால் - சோர்ந்து இருக்கின்றார்களாதலால், பழிச்சுகின்றோர் - அவர்களைப் பூஜிப்பவர், ஏடு - இதழ்கள், அவிழ் - மலர்ந்த, நறிய - வாசனையுடைய, போதால் - மலரினால், அருச்சனை புரியுந்தோறும் - அருச்சனை செய்யும்போதெல்லாம், அஞ்சுவர்—(இதுவும் தம்மை வருத்தவருகின்ற மன்மதனது மலர்ப்பாணந்தானோ வென்று அத்தேவர்கள்) பயப்படுவார் (என்றான் நளன்). மாதோ-அசை.

விரிவுரை :—நளனது தூதுமொழி யனைத்தும் இளம் பரிகசத்தொடு சிறிதுகலந்தே நிகழ்கின்றன. "உன்னை விரும்பியதன் பயனாகத் தேவர்கள் உற்றகதியை என்னென் றுரைப்பேன் தமயந்தி. மன்மதனது மலர்ப்பாணம் பட்டுப்பட்டு வருந்தியிருக்கும் அவர், மருண்டவன் கண்ணிற் கிருண்டதெல்லாம் பேயென்ன, இவ்வுலகிலுள்ளவர் அருச்சனை செய்தூவும் பூக்களைக்கண்டும் அஞ்சி நடுங்குபவராய் முடிந்திருக்கின்றனர். இத்தகைய எளிமையை நீ காத்தல் வேண்டும்,'' என இயம்புவது அத்தேவர்தம் காதற்பேதைமையையே பெரிதும் பகர்வதாகும்.

குறிப்பு :—செரு + கிளர் = செருக்கிளர் :—இது இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராயினும், நிலைமொழி இரண்டு குறில்களாலான சொல்லாதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது. (   ).

வாளி + செழுமலர் = வாளிச் செழுமலர்:—வாளியாகிய செழுமலர், என விரியும். இது பண்புத்தொகை ; ஆகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது.

—

இன்னணந் தேவர் மாழாந்
திருநில வரைப்பிற் போந்துன்
பொன்னவிர் திதலை யார்ந்த
புணர்முலைப் போகம் வேட்ப
முன்னமெத் தவஞ்செய் தாய்கொ
லியைவதே முறைமை யென்றான்
கன்னல்வி லொளித்து நின்ற
காமனே யனைய நீரான். 65

உரை :—கன்னல்வில் - கரும்புவில்லை, ஒளித்து - மறைத்து, நின்ற - அங்கு நின்ற, காமனே அனைய நீரான் - மன்மதனே போன்ற தன்மையுடைய நளன் —“ இன்னணம் - இப்படியெல்லாம், தேவர் - தேவர்கள், மாழாந்து - மயக்கமெய்தி, இரு - பெரிய, நிலவரைப்பில் - பூமியில், போந்து - வந்து, உன் - உன்னுடைய, பொன் - பொன்னைப்போல், அவிர் - பிரகாசிக்கின்ற, திதலை ஆர்ந்த - தேமல் பொருந்திய, புணர்- நெருங்கிய, முலைப்போகம் - முலைகளினுடைய போகத்தை, வேட்ப - விரும்புவதற்கு, முன்னம் - முன்பிறப்பில், எத்தவம் செய்தாய்கொல் - நீ எவ்வளவு பெரியதவத்தைச் செய்திருக்கின்றாயோ—ஆகையால், இயைவதே - அவர்களை மணக்க நீ சம்மதிப்பதே, முறைமை —தகுதியாகும்,'' என்றான் - என்று கூறி முடித்தான்.

குறிப்பு:—இப்பாடத்தில் காட்டப்பெற்றிருக்கின்ற புணர்ச்சிகளுக்கு விதிகள் எவ்வெவ் விதழ்களில் உரைத்துளோம் என்பதை வாசகர்களே தேடி யறிந்து குறித்துக்கொள்வது நல்ல பயிற்சியாகும் என எண்ணி இடம் விட்டிருக்கின்றோம்.

பிரஜைகளின் கடமை
(From Plato's dialogues)

[771 - வது பக்கத் தொடர்ச்சி]

சாக்ரடீஸ்:—எனது அருமைக் கிரிட்டோ, உனது ஊக்கம் நேர்வழி நிகழ்வதொன்றாயின், அது போற்றுதற் குரியதேயாம். ஆனால் வழிமாறி நடப்பதாயின், அது நிகழ்த்திவைக்கும் முடிவு தீயதாகும். எனவே, நண்ப, நீ சொல்வது ஏற்பதற்குரியதோ அன்றோ வென்பதை நாம் ஆய்ந்துபார்ப்போம். நான் ஆய்ந்தோராது எதனையும் செய்வதில்லை என்பதை நீ அறிவாய். மனிதனுடைய வாழ்க்கையில் அவன் நடந்துகொள்ள வேண்டியதைப் பற்றி நான் சில முடிவுகள் செய்துள்ளேன். அம்முடிவுகளைக் கடவாது நான் போற்றியும் வருகின்றேன். எனினும் அவைகளை விடச் சிறந்த வேறு கொள்கைகளை நாம் இப்பொழுது

செய்யும் ஆராய்ச்சியால் எய்த இயன்று,நீ சொல்வது அக்கொள்கைக்கு இயைவதுமாயின், அவைகளை ஏற்றுக்கொண்டு நீ சொல்லும்வண்ணம் செய்வேன். இல்லையேல் நீ வகுத்தபடி நடக்க என்னாலாகாது. அதிகமான தொகையினர் வகித்துள்ள செல்வாக்கும் அதிகாரமும் என்னைச் சிறையிலிடட்டும், பின்னும் பல கொடுமைகளைப் புரியட்டும், என் சொத்துக்களைக் கவர்ந்துதான் கொள்ளட்டும், என்னைக் கொல்லட்டும், பிள்ளைகளைப் பயமுறுத்தும் பேய் பூதங்களென்ன என்னையும் பயமுறுத்தட்டும்—நானோ எனது கொள்கைக்கு மாறாக ஒன்றும் ஒழுகமாட்டேன். எனின், நினது சொற்களை இனிச் சிறிது சோதித்தல் வேண்டும். அன்னதற்கு,ஜன அபிப்பிராயம் என்பதன் தன்மையைப்பற்றி நெருங்கிப் பார்ப்போம். ஜன அபிப்பிராயங்களிற் சில மதிக்கப்படலாம் என்றும் மற்றவை ஏற்பதற்குரியவை அல்ல வென்றும் நாம் சொல்லிக்கொண்டிருந்தோம். இப்படிப் பாகுபடுத்திக் கொண்டதோர் கொள்கை தக்கதே என்று நான் தண்டிக்கப்படுமுன்னர்க் கூறிவரலாயினேன். அக்கொள்கை நேரிதோ, அன்றோ? நேரிதாயின் ஒரு சமயம் நேராகவிருந்தது, நான் தண்டனையடைந்தபிறகு வெறும் பேச்சாய் வேடிக்கையாய் முடியுமா ? இக்கேள்விகளை நண்பா உனது உதவிகொண்டு ஆய்ந்துபார்க்கவே விரும்புகின்றேன். சிலரது அபிப்பிராயம் ஏற்கக்கூடியதென்பதையும், மற்றவர் சொல்பவை ஏற்கக்கூடியவை யல்லவென்பதையும், ஆமோதித்திருக்கின்றனர் பற்பலர். நண்ப, இப்பொழுது நீ எனது நிலையில் இல்லாதவன். மனிதச்செயலால் நாளை நீ சாகவும் போவதில்லை. எனவே நடுவுநிலை நின்று விஷயத்தை நுனித்து நோக்கலாம். ஆதலின் சில அபிப்பிராயங்களும் சிலரது அபிப்பிராயங்களுந்தான் மதிக்கப்படலாமென்றும், மற்ற அபிப்பிராயங்களும் மற்றவர்களது அபிப்பிராயங்களும் மதிக்கப்படுவதற் குரியவையாகாவென்றும் நான் சொல்வது நேரிதோ, மற்று அதனில் ஏதேனும் பிழையுளதோ, நீயே உரை.

கிரிட்டோ :—நேரிதே.

சாக் :—நல்லவையே மதிகப்படவேண்டும், கெட்டவை தள்ளப்படவேண்டும், அன்றோ ?

கிரி :—ஆம்.

சாக் :—அறிஞர்களின் அபிப்பிராயம் நல்லவை ; அறிவிலாதார் அபிப்பிராயம், கெட்டவை ?

கிரி :—உண்மையே.

சாக் :—இன்னொரு விஷயத்தை எடுத்துக்கொள்வோம். உடற்பயிற்சிபெறும் சீடனொருவன்ஜனங்கள் பலர் காட்டும் குறைகளையும், விளம்பும் புகழுரையையும் மதிப்பதா? அல்லது தனக்கு உடற்பயிற்சி செய்விக்கும் ஆசிரியன் ஒருவனது மொழிகளை ஏற்பதா? சொல்லுவாய்.

கிரி:—பயிற்சிசெய்விக்கு மொருவன் சொல்லையே உட்கொள்ளவேண்டும்.

சாக்:—அந்த ஒருவன் காட்டும் குறைகளுக்கு அஞ்சியும் புகழ்ச்சியை அவாவியும் கருமத்தை நிகழ்த்த வேண்டுமே யல்லாது பலபேர் சொல்வதைக் கேட்டு ஒன்றும் அவன் செய்யலாகாது.

கிரி:—இது தக்கதே.

சாக்:—அவனுக்கு உடற்பயிற்சி போதிக்கும் அவ்வாசிரியனொருவனுக்கு எது நல்லது என்று தோன்றுகின்றதோ அவ்வண்ணமே சீடன் தான்பயின்றும், உணவுகளை உட்கொண்டும் வரவேண்டும். அவன் உடல்பயிற்சி தரும் ஆசிரியன் சொல்லும் வண்ணம் நடக்க வேண்டுமேயல்லாது மனிதரில் மற்றையோரெல்லாம ஒருங்கே சேர்ந்துரைத்தாலும் அக்கருத்திற் கவன் உடன்படலாகாது.

கிரி:—நீ சொல்லுவது உண்மையே.

சாக்:—அப்பயிற்சியைப் பெறுபவன் அந்த வொரு ஆசிரியன் சொல்லும்வண்ணம் செய்யாது உடற்பயிற்சி ஞானமிலாப் பலர் சொல்வதைக் கேட்டு நடந்தால் கேடுறுவான், அன்றோ ?

கிரி:—ஆம், கேடுறுவான்.

சாக்:—அவ்வண்ணம் ஆசான்சொல்லைக் கேளாதான் எக்கேடுறுவான் ?

கிரி:—அவன் தேகம் கெட்டுவிடும். சீழ்ப்படிந்தொழுகாமையின் பயன் இத் தீமையே.

சாக் :—நன்று நண்பா. மற்ற இதுபோன்ற பலவற்றை நாம் இங்கு வரிசையாகக் குறிக்கவேண்டியதில்லை. இந்த உண்மை, மற்ற விஷயங்களின்பாலும் பொருந்துமன்றோ ? நல்லது கெட்டது, நியாயம் அநியாயம்,என்னும் விஷயங்களின் வாய்மையை அறியக்கூடிய அறிஞன் ஒருவனது வார்த்தையை மதித்து ஏற்பதா, விஷயஞானம் பெற்றிராத அதிகமானவர் கூற்றிற்குப் பயந்து நடப்பதா ? அறிவாளியின் துணையைக் கைவிடுவோமேயானால், நமதான நல்ல கொள்கையை (Principle) அழித்து நாசம் செய்தவர்களாவோம். அன்னார் துணையிருப்பின் அந்நல்ல கொள்கை வேர்விட்டுச் செவ்வனே வளரக் காண்போம், இல்லையேல் அழுகி நசித்துப்போம்.

கிரி :—உண்மையே, ஐய.

சாக் :—மற்றோரு உதாரணம் எடுத்துக்கொண்டு பார்ப்போம். விஷயஞானம் பெறாதார் சொற்களைப் போற்றிவளர்த்துக் கருமங்கள்புரிந்து வருவோமாயின் நோயின்றி வளரவல்ல வேறொன்றை அழித்துவிடுவோம். வளர்ந்தோங்க வல்லதொன்று அழிக்கப்படுமேயானால் ஐய, இவ்வாழ்க்கையோ பின் வாழ்வதற்குரியதாகாது. நமது உடல் நோயுற்றுத் தேய்வதாயின், வாழ்வு நலமுறுமோ ?

கிரி :—நீ சொல்வது உண்மையே.

சாக் :—கேடுற்ற உடலோடு வாழ்வதும் கூடுமோ ?

கிரி:—கூடாது.

சாக் :—நியாயத்தால் செழித்தோங்கக் கூடியதும், அநியாயத்தால் அழிந்துபடக் கூடியதுமான உயர்ந்த அம்சம் நசித்தபின் மனிதனது வாழ்க்கையின் ஊதியம் யாது ? நியாய அநியாயங்களைச் சார்ந்து விவகரிக்கும் அம் மானுடஅம்சம் உடலைப்பற்றிய விடயங்களைவிடத் தாழ்ந்ததென்று எண்ணுவது.

கிரி :—அன்று, அன்று.

சாக் :—எனின், உடலினும் அதிகமாய் மதிப்பதற்குரிய அம்சமொன்றன்றோ அது ?

கிரி :—ஆம், மிக மிக நாம் மதிக்கவேண்டும்.

சாக் :—எனவே, நண்ப, நம்மைப்பற்றி அதிகமானவர்கள் சொல்வதை நாம் பொருட்படுத்தலாகாது. நியாயம் இதுவென்றும் அநியாயம் இதுவென்றும் உய்த்துணர்ந்த அவ்வொருவன் சொல்லையும், சத்தியம் காட்டித்தரும் முடிவையும்தான் நாம் கொள்ளவேண்டுமென்று ஏற்பட வில்லையா ? இது

நியாயம், இது நல்லது, இது யோக்கியமானது' என்று அதிகமானவர்கள் கூறுவதற்கு மதிப்புத் தரவேண்டுமென்று நீ குறிக்குங்கால் பிழையை ஆதாரமாகப் பற்றித் துவக்கலாகின்றாய். நல்லது, ஆனால் 'அதிகமானவர் சொல்கின்றவிதம் செய்யாவிடின் நம்மை அவர்கள் கொன்றுவிடக் கூடுமே' என யாரேனும் எடுத்துக் காட்டலாம்.

கிரி:—ஆம் ஐய, அதுதான் விடை. —

சாக்:—உண்மையே. என்றாலும், எனது முடிவு இன்னும் அசைக்கப்படவில்லை என்பதையே நான் காண்கின்றேன். இன்னுமொன்று மவ்வாறே குலையாமல் நிற்கின்றது. அது யாதெனில்—பெருமையுடன் பாராட்டற்குரியது உயிரோடுமட்டு மிருப்பதன்றி, நல்வாழ்க்கையே—என்பதாம். இதனையும் உண்மையென நீ கொள்கின்றாயோ?

கிரி.—ஆம், உண்மை.

சாக்:—நல்வாழ்வென்பது தர்மமும் யோக்கியமும் வழுவாமல் வாழ்கின்ற வாழ்வுதான் அன்றோ?

கிரி:—ஆம்.

சாக்:—நாம் இதுவரை ஆய்ந்துகண்டவற்றினின்று, ஏதன்ஸ்நகர ஜனங்களின் அநுமதி பெறாது நான் தப்பித்துக்கொள்வது முறையா, அல்லது சிறையிலேயிருந்து தண்டனையை ஏற்பது முறையா என்பதைத் தேர்தல்வேண்டும். நான் தப்பி ஓடிவிடுவது நியாயமாயின், நான் சிறையினின்று வெளிபேற முயல்வேன். இல்லையாயின் நீ சொல்லும்வண்ணம் செய்யமாட்டேன். போதிய பணமிருக்கின்றதென்றும், பழிவந்து சாரும் என்றும் என் மக்களைப் பயில்வித்து ஆளாக்கும் கடனென்று உளதென்றும் நீ கூறியவையெல்லாம், முடியுமானல் ஒருவனை உயிரோடிருக்கவைப்பதற்கும், ஒருவனைக் கொல்வதற்கும் ஒருங்கே மனங்கொள்ளும் புத்தியில்லாக் கூட்டம் சொல்பவை. இனி நாம் பார்க்கவேண்டுவது, நண்பர் துணையும், பொருளையும்பெற்றுத் தப்பித்துக்கொள்ளல் என்பது நேரான செயலாகுமா ஆகாதா என்பதே. நேர்முறையன்றெனின் நான் இங்கு இருப்பதால் எய்தும் மரணமனைய துன்பங்களைப் பொருட்படுத்தல் கூடாதன்றோ.

கிரி:—நீ சொல்வது உண்மைதான். ஆனல் நாம் இனி என்ன செய்வது?

சாக்:—இருவருமாகச் சேர்ந்து முடிவொன்று எய்த முயலுவோம். எனதுமுடிவு முறையலதென்று என நீ சாதிப்பாயேல், நீ சொல்லும்விதம் செய்வேன், இல்லையேல் என் அருமை நண்பா, ஏதன்ஸ் நகரமாக்கள் விருப்பத்திற்கு விரோதமாய் என்னைத் தப்பித்துக்கொள்ளுமாறு தூண்டவேண்டா. உனது விருப்பத்தின்படி நடக்க நானும் விரும்புகின்றேன், ஆயினும் நீதிமுறையுணர்ந்த என் முடிவிற்கு விரோதமாய் யாதுஞ் செய்யேன். இப்பொழுது நமது ஆராய்ச்சியில் புகுவோம். நான் கேட்பதற்கு மாத்திரம் நேரான விடையளித்து வருவாய்.

கிரிட்:—அப்படியே செய்கின்றேன்.

(தொடரும்)

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[776-வது பக்கத் தொடர்ச்சி]

ஒருமகன் பரதனே யாதல் வேண்டுமோ

வடநூன் முனிவர் வெளிப்பட உரைத்ததும் தமிழ் மொழிக்கரசர் குறிப்பாலுணர்த்தியதும் கைகேயியின் கற்புக்கடனாற்றுமத் திறமையே என்றெண்ணும் ஸ்ரீமான் சோமசுந்தரபாரதியாரது கொள்கைக் குடன்பட வியலாவகை கதையினமைப்பும் அவ்விரு பெருமக்களின் வாக்கும் நிகழுமாறு முதலிற் கண்டனம். நூலாசிரியர் இருவர்களது இதயமும், 'கெடுத்தொழிந்தனை' என்ற தொடக்கத்துக் கம்பர் செய்யுளின் பொருளும் தன்னுடைய கருத்திற்கே இணங்கியிருக்கின்றனவென்று அவர் சாதிக்கப்புகும் இரண்டு பாகங்களில், நூலின்கணுள்ள சான்றுகளெல்லாம் முன்னதற்கு மாறாகவே அமைந்திருக்குந் தன்மையைக் காட்டி முடித்தாய்விட்டபடியால், பின்னது பற்றிய அவர் சொற்களை இனிச் சோதித்தல் வேண்டும். அவ்வாறு சோதிக்குங்கால் இச்செய்யுளின் பொருளும் அவருக்கு உடனின்று உதவாமை புலப்படும். தன்னுடையதல்லாப் பிறபொருள் எதுவும் அச்செய்யுளிற்குப் பொருந்தாப் புன்மையுடைத்து என விலக்கத் துணிகின்ற அவ்வறிஞர் கடக்கரிய காரணங்கள் காட்டியிருக்கின்றாரென எண்ண இடமில்லை. கூனியின் தொழி[illegible] அவர் வைத்துக் கட்டிய கோபுரம்போல் சில மாயச்சிகரங்கள் இதனிலுந் தென்படுகின்றன.

இவ்வயின் ஆராயலாகின்ற செய்யுளில் அடங்கிய, 'ஒருமகற் கெனவே கொடுத்த பேரரசு' எனும் சொற்கள் ஒவ்வொன்றும் முன் சுல்கப் பிரதிஞையாய்க் கொடுத்ததைக் குறிக்குமேயன்றி இப்பொழுது இராமன் முடி சூடுவதைச் செப்புதல் இயலாதென்பார் பாரதியார். இங்கு, 'மகன்' என்பது இராமனையின்றிப் பரதனையே பகர்கின்றது என்னுமவர், ஒரு என்னும் அடைமொழி வந்திருப்பதையும், கொடுத்த என்பது இறந்தகாலத்திருப்பதையும், அரசு தான் பேரரசு என உரைக்கப்பெற்றிருப்பதையுந் தனக்கு ஆதாரமாகக் கொள்கின்றனர். ஊதிய மிவைகளி லுளதென் றுன்னுதலருமை.

இராமனுக்குக் கோமுடி நாளையே நேருமாதலின் கூனி, 'கொடுத்த' என்று இறந்தகாலத்தால் அச்செய்தியைக் குறித்திராளென்று மறுத்து, முன் சுல்கப் பிரதிஞையுடன் தயரதன் கொடுத்ததையே அச்சொல் ஐயமின்றிக் காட்டுகின்றதென ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வழங்குவதைக் கருதுமுன், முன்னாள் தயரதன் கொடுத்ததுதான் உண்மையெனக் கொண்டாலும் அவ்வரசை யாருக்குக் கொடுத்தான் என்பதைச் சிறிது ஆராய்தல் வேண்டும். அவ்வாறு ஆராயுங்கால் எம்மகற்கும் அன்று அப்பேரரசு கொடுக்கப்பட்டதில்லையெனஎண்ணவேண்டிவருகின்றது. "புரா ப்ராத: ஸ்ஸ:மாதரன்தே ஸமுத்வஹன் மாதாமஹே ஸமாச்ரௌஷீத் ராஜ்யசுல்கம் அநுத்தமம்" என்று இராமன் பரதனுக்குக் கூறுகின்ற வாக்கியத்தில் 'கைகேயி வயிற்றில் பிறக்கின்ற பிள்ளைக்கு இராஜ்யத்தைத் தருவதாகத் தயரதன் வாக்களித்தான்' என்பதற்குரிய சொற்கள் காண்கிலம். கோவிந்தராஜர் தன் வியாக்கியானத்தில் இக்கருத்தைக் காட்டுகின்றார் என்பது உண்மையே. தீர்த்தீயர், உமாஸம்ஹிதையிலிருந்து எடுத்துக்காட்டும் மேற்கோளிலிருந்து, தயரதனுக்கும் அசுவபதிக்கும் ஏற்பட்ட சங்கேதம் எவ்வகைத்தென்பது புலப்படவில்லை. "சுல்கம்"' என்னும் சொல்லிற்கு பந்தையம் தனம் என்ற இரு பொருள்களும் உள. இராஜ்யமாகிய தனத்தைத் தருவதாக வாக்களித்தான் தயரதன் என்பதொன்றே அந்தச் சுலோகத்தில் தெரியக்கிடக்கின்றது. இதிலிருந்து, கைகேசியின் வயிற்றில் பிறக்கின்ற பிள்ளைக்கு அரசு அளிக்க ஒவ்வினன் என்று கொள்வது, ஸத்யவதியின் தந்தைக்குச் சந்தனுமகாராஜன் கொடுத்தவாக்கோடு கலந்ததொரு பாரதமாய்த் தீருமன்றி இராமாயணத்தோடு நிற்பதாகாது. ஆதலின், தயரதன் தன் அரசினைக் கைகேயிக்கே சீதனமாகக் கொடுத்தானென முதனூல் கூறுகின்றதென்று கொள்ளலே முறை. இவ்வாறு கொண்டக்கால், "ஒருமகற்கெனவே" என்ற சொற்களுக்குத் தானுரைக்கும் பொருள் ஏற்காதாகையால் ஸ்ரீமான் சோமசுந்தரபாரதியார், "உடன் பிறந்தவனே, முற்காலத்தில் உனது தாயாரை நமது பிதா விவாகம் செய்துகொள்ளும்பொழுது உனது . பாட்டனார் (கேகயர்) இடம் (அவர் பெண்வயிற்றுப் பேரனுக்காமாறு) தனது ராஜ்யத்தைக் கன்யாசுல்கமாகப் பிரதிக்ஞை செய்து கொடுத்தார்" என்ற தமிழ் மொழி பெயர்ப்பிற்கு இணங்குகின்றனர். இணங்கிச் "சொற்கள் சிலவற்றை எவ்வாறு மாற்றிக் கூட்டிக் குறைப்பினும் இச்சுலோகக் கருத்திதுவாகவே அனைவர்க்கும் ஒப்புமுடியுமென்பது இதுவரை வெளிவந்த எல்லா வான்மீக மொழிபெயர்ப்புக்களாலும் விசதமாகும்" என்று அவர் இயம்புதல் வியப்பே. சுலோகத்தின் வாசகம் இருக்க அதனைவிட்டு, மொழிபெயர்ப்புக்களைக் தழுவிக்கொள்வானேன். "மாதமஹே ஸமாச்ரௌஷீத் ராஜ்ய சுல்கம்" என்னும் சொற்கள், தனது ராஜ்யத்தைக் கன்யாசுல்கமாக உன் பாட்டனாரிடம் பிரதிக்ஞை செய்தார்" என்றமட்டில் பொருள் பயக்கவல்லனவாக,—அவர் பெண்வயிற்றுப் பேரனுக்காமாறு—என்னுமிக்கருத்தை அவைகளிடையே பெய்து கொள்ள வேண்டுமென்பது இன்றியமையாததன்று. பாரதியார் வாதிக்கும் கொள்கைக்கு அவசியமானதால் மொழிபெயர்ப்புக்களில் செருகிய இச்சொற்கள் அவருக் குகந்தன வாயினபோலும். ஆயினும் என்! தன்னைப் புறக்கணிப்பார்மாட்டும் சலிக்காது முன் வந்துவந்து அவரைத் தடுத்தாட் கொள்ளும் பெருந்தகைமை மெய்ம்மைக்குளதாகையால், இங்கு, கைகேயியின் பிள்ளைக்கு ஆமாறு அரசு தயரதனல் அளிக்கப் பெற்றதென்று பெருக்கிக்கொண்ட நமது நண்பர், வேறோரிடத்தில், "தசரதன் மணப்பரிசமாகத் தன் நாட்டைக் கைகேயிக்குத் தந்ததாக வடமொழிப் பொய்யில் புலவரே கூறியிருக்கின்றார். இனி அதை மறுக்க வழியில்லை. மனைவிக்கு மன்னவன் வளநாடு வழங்கும்போது தனக்கு அதிற் கொடையுரிமை கிடையாமை தெரிந்தே தந்தான........" எனப் பகருங்கால், வடமொழிப் பொய்யில் புலவரது சுலோகத்தின்படி, தயரதன் தன் நாட்டைக் கைகேயிக்கே தந்தானென்னும் உண்மையை அவருள்ளம் இரகசியமாகத் தழுவிநிற்கும் புணர்ப்புப் புலப்படுகின்றதே. ஆம்; இனி அதை மறுக்க வழியில்லை.

ஆதலின் வான்மீகசுலோகத்தின்படியும் பாரதியார் உள்ளத்தின் இரகசிய உணர்வின்படியும் அரசினைத் தயரதன் மணப்பரிசளித்தது கைகேயிக்கே என்று உரைத்தால் உரைக்கலாமே யன்றி அவள்வயின் வரும் மைந்தனுக்கென்னல் எவ்விதத்திலும் உண்மையோ டிணங்கக்கூடியதொன் றன்று. எனின், "ஒருமகற்கெனவே கொடுத்த பேரரசு" என்பதிலுள்ள 'மகன்' பரதனைக் குறிக்கவில்லை—மற்று, இராமனைத்தான் குறித்தல் வேண்டும். அவ்வாக்கியத்திலுள்ள மற்ற சொற்கள் இராமனைக் குறிக்க இயலாதாகையால் அம்'மகன்', பரதனே யாதல்வேண்டுமென்றும், அதனின்று பண்டைய சுல்கப்ரிதிக்ஞையை கூனிநினைவூட்டியதே இச்செய்யுளின் பொருளெனக் கொள்ளவேண்டுமென்றும் ஸ்ரீமான் சோமசுந்தரபாரதியார் வாதிக்கின்ற முறையில், முடிவின் பொருத்தமின்மையைக் காட்டியபின் நடுநின்ற சொற்கள் இராமனுக்கே இயற்கையாக வல்லனவென்பதை எடுத்தியம்பல்மிகை.எனினும்,ஒருஎன்ற அடையும், 'கொடுத்த' என்ற இறந்தகாலமும்,பேரரசே கொடையாவதும் இராமனுக் கடுக்காவோ வென்பதைச்சிறிது சோதித்தல் செவ்விதே.

இராமனை இகழ்ந்து பேசுகின்ற கூனி, அவனை 'ஒரு' என்னும் அடையால் சிறப்பித்திருக்கமாட்டாள் என்னுமம் மறுப்புப் பெரியதோர் பொருளுடைத்தன்று. "துதிநிந்தைச் சொற்களால் இராமனைச் சுட்டுஞ் சுபாவமுடையவள்" கூனி என்பதை ஒவ்வும் பாரதியார், வேண்டுமெனில் இவ் 'ஒரு" என்பதையும் துதிநிந்தையிற் சேர்த்துக்கொள்ள இடையூறு அதிகம் காணமாட்டார் என்பது திண்ணம். அதுவுமன்றி, 'ஒரு' என்பது எண்ணுப்பெயராகவே இங்கு இயையும் என்பதை மறக்கவேண்டுவதேனோ. இராமன் நூறுவருடங்களாண்டபின் பரதனுள்வான் அவ்வரசை என மதித்திருந்த கைகேயியைத் தெருட்டிய வாசகம் இதுவென்பதை நினைத்தக்கால் 'ஒரு' எனக் கூனி இராமனைப் பிரித்துரைத்ததன் பொருத்தம் புலப்படும்.

"கோமுடி சூடுவன் நாளை" எனக் காலவழுவின்றிப் பேசவல்ல கூனி இராமனைக் குறித்தாளாயின் 'கெடுத்த' என்று இறந்தகாலத்தில் செப்பமாட்டாளென்று பாரதியார் வாதிப்பதிலும் வாய்மையில்லை. முன்னும் பின்னும் நெடிதே சிந்திக்கப் பயின்றார்க்குச் சிலபோது அயலிலிருப்பவைகளைக் காண்பது அரிதாகிவிடுகின்றதுபோலும். இந்தச் செய்யுளின் முதலடியிலேயே, 'கெடுத்தோழிவாய் உனக்கரும் புதல்வனை' என்னாது கெடுத் "தொழிந்தனை" என இறந்தகாலத்தில் மந்தரை தேற்றம்பற்றிக் கழறியுள்ளாள். கேடுறுவதெனின், நாளை இராகவன் முடியைச் சூடியபின்னன்றோ பரதன் கெட்டொழியவனுவான்? ஆதலின், அங்குப் பாரதியார் தன் மொழியின்படியே, "வழுவமைத்து அழுது அலையத்தானே"

வேண்டும். ஆயினும், இதுவொரு பொருளன்று. வழுவமைதி யொன்றும் வேண்டவும் வேண்டா. வாய்மையிலே,இராமனுக்கரசினை முன்னரேகொடுத்து விட்டனன் தயரதன். கன்னிகாதானம் முதலினும் அதன் அடையாளமாக மாங்கல்யதாரணம் பிறகும் நிகழுமாப்போல், அரசினை அளித்ததற்குப் பின்வரும் சடங்கு முடிசூடல்.கொடையின் பாகங்களாகியஈவது ஏற்பது என்னும் இரண்டு காரியங்களும் முன்னரே முடிந்துவிட்டன. சடங்கொன்றே நிகழ நிற்கின்றது. ஆதலின்,'கொடுத்த பேரரசு' என்றதற்கும்,"கோமுடிசூடுவன் நாளை" என்றதற்கும் காலத்தால் யாதும் முரணில்லையே.

இனி, இராமனுக்குத் தயரதன் மற்றை நாள் அளிக்க இருந்தது இளவரசுப் பதவிதான் என எண்ணிப் பாரதியார், பிறவாமுன் பேரரசு அளிக்கப்பெற்ற பரதனையே 'ஒரு மகன்' என்னுஞ் சொல் குறிக்குமெனக் கூறுகின்றார். இதனில், நெடிதுநினைந்து ஆராய்வார்க்குரியதாம் தன்னையே மறக்குமத் தன்மை ஸ்ரீமான் பாரதியார்பால் புலப்படுகின்றது. இவரே, சற்றுமுன் எடுத்துக்காட்டியபடி இராமன் "கோமுடிசூடுவன் நாளை" அன்றோ? கோமுடி என்பது இராஜ்ய பட்டாபிஷேகமே யல்லது இளவரசுப்பட்டமாகாது. "இருந்துயர்ப் பெரும்பாரம் அரசன் வினையின் என்வயின் வைத்தனன் எனக் கொளவேண்டா" என்று தயரதன் வேண்டிய தனைய இடங்களிலும், "இராமனுக்கு அரசை நல்கி, அவனிமாதனெனும் ஒரு மகள் மணமுங்கண் டுவப்பதாயினேன்" என அவன் தன் அவைமுன் அறைந்த மாற்றங்களாலும், கம்பரது நூலின்படி இராமன் கோமுடியுடன் முழுவரசையும் அடையநின்றன னென்பதே நேர். "வன்தாளின் இணைவணங்கி வளநகரந் தொழுதேத்த மன்னனா வான் நின்றாயை" என்றபோது குலசேகரப் பெருமானும் இதனையே உட்கொண்டிருந்தார். இவ்வாறாக, ஸ்ரீமான் பாரதியார்,"இளவரசாபிஷேகமே மன்னவன் செய்விக்க முயன்றதாக வான்மீகத்தில் வலியுறுத்தப்பட்டிருக்க, 'தேவபாடையினிக்கதை செய்தவர்,மூவர் தம்முளு முந்திய நாவினர் உரை' யறிந்ததன்படியே, தமிழ்ப்பாவினுணர்த்தவந்தக் கம்பர் ஈண்டு இராமனுக்குத் தரப்போவதைக் குறிப்பரேல், தகவுமறந்து, பேரரசு என்றதனைச் சுட்டியிரானன்றே" எனத் துணிவது இடையறா வியப்பைத்தருகின்றது. வான்மீகத்தின்படி இளவரசுப்பட்டமேஇராமனுக்கு மன்னவன்ஈயநின்றனனென்பது உண்மையே. ஆயினும்,வான்மீக வழியினின்று எள்ளளவும்மாறாது கம்பர் எழுதிவந்தாரென்பதுஉண்மையாகுமோ.கம்பர் பற்பலஇடங்களில் மாற்றிக் கொண்டதற்குப் பாரதியாரே தமது நூலின்கண் சில சான்றுகள் காட்டியிருக்கின்றார். அவ்வாறே இளவரசும் கோமுடியாய் மாறிய தென்பதற் கையமில்லை. கோமுடி என்றதுமாத்திரமன்றி இதனைத் திண்ணமாக்குவதற்கு மற்றுஞ்சில குறிப்புக்கள் உள. வான்மீகி முனிவரது நூலில் விவகரித்த தயரதன்,இராமனுக்கு முடிபுனைய முயன்றானல்லது தான் அரசின் நீங்கி அருந்தவம் இயற்றவனத்தின்கண் நண்ணுமெண்ணம் சிறிதுங்கொண்டிலன். கம்பரோ தனியரசாட்சியில் தாழுமுள்ளத்தனா யமைத்த தயரதனை அரசின் நீங்கி அகலுமாறு விழையச்செய்தனர். ஆதலின் இராமனுக்கு இங்கிவன் ஈந்தது பேரரசேயாதல்வேண்டும்.

எனின், 'ஒரு மகன்'என்ற சொல் பரதனைக்குறிக்க இயலாததுமன்றி இராமனைக் குறிப்பதற்கு யாதும் இடையூறில்லையே.

இளமையும் முதுமையும்

நமது வாழ்நாளில் இளமையே சிறந்த பருவம். அது கவலையற்ற காலம்; பெற்றோரது கண்பார்வையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளரும் அமயம். வேடிக்கை விளையாட்டுக்களிலேயே கருத்தைச் செலுத்தி,உண்பதும் உறங்குவதுமாய்இருக்கும் நாள் அதனில் நாளைக்கு வேண்டுமே என்னும் எண்ணம் தோன்றாது, இன்னொருவருக்கு வேண்டுமே என்கிற நினைவு கூடாது. திங்கள் முழுவதும் வருவாய் நிலைத்திருக்க வேண்டுமே என்னும் கவலையுட் புகாது இருந்த அந்நாள் மீட்டுமோர்முறை வருமோவெனப் பெருமூச்செறியும் முதியோர் பலர்.

மேலும் இளமை பாவமற்றது; முதுமையிற் பல பாவங்கள் நம்மைச் சூழ்ந்துகொள்கின்றன. அதனாலன்றோ இயேசு கிறிஸ்துவும் சிறு குழந்தைகளைத் தன்னை யணுகாது துரத்திய மாணவரைக் கடிந்து, அவர்களை அருகணைத்து மடிமீதேந்தி "இவர்களே இறைவனது உயருலகத்திற் சேர்வதற்குரியவர்; இவர் போன்றவராலேயே மேலுலகம் குடிகொள்ளப்பட்டுள்ளது" என்றுரைத்தார்? தாய் வயிற்றிற் குழவியாய் நாம் அமைந்துள்ள காலத்து நம் மருகிருந்து நம்மைக் காப்பவர் கடவுள்; காத்து, நாம் மண்ணுற்று மழவெனச் சீராட்டப்படுங் காலத்தும் நம்மை யணுகிக் களிக்கச் செய்கின்றவரும் அவரே. கடவுள் குழவி முன்னின்று குதூகலிக்கச் செய்யாவிடின், அம்மழவு காரணமின்றி முறுவலிப்பதேன்? நாளடைவில் பிள்ளை வளரவளர அவனைப் பற்றிய கலியும் வளரும். எனினும் அவன், தான் முன்னுணர்ந்த அருட்பெருஞ் சோதியை அறியாமலிருப்பதில்லை. களிப்பென்னும் பேரானந்தப் பெருங்கடலில் அழுந்தும்போதெல்லாம் அம்மெய்ச் சுடரொளியை அறிந்து நடந்து மனிதவுருவடையும்போழ்து அவ்வொளி மறையக் காண்கிறான்.

உலகென்னும் செவிலித்தாய் அவனைப் பெற்றது முதல் அவனுக்கெனப் பல களியாட்டங்களைக் காட்டித் தன்பால் அன்பு குறையாமலிருக்க முயல, அவனும் அவற்றிலீடுபட்டுத் தான் தோன்றியதையும், தன்னை யண்டி நின்றபரம் பெருஞ்சுடரையும் அறவே மறந்துவிடுகின்றான். அவன் ஆடும் விளையாட்டுக்களைக் கண்டீரோ? கலியாணமும் திருவிழாவும், இறப்பும் சடங்குகளும் ஆகிய இவற்றை இவனுக்குக் கற்பித்தவரார்?முன்னறிவின் பகுதிகளேயன்றோ அவை? அவற்றை மீண்டும் புதியவையென வருந்திக் கற்கின்றான். விரைவில் வேறு விஷயங்களைக் கற்றுப் பிறர் செய்வனவற்றைச் செய்து மனிதரது வாழ்நாளென்னும் சிறையி லடைபட்டுக் கிடப்பதுமவனது ஊழே.

நமது பயனற்ற வாழ்வைப் பற்றிப் பலர் எழுதியிருக்கின்றனர். தத்துவ ஆராய்ச்சியில் மூழ்கிய நம்மவர் இதைப்பற்றி எழுதியது ஓர் புதுமையன்று. மனிதன் செயல்களைப் பின்வரும் வடமொழிப் பாடல் நன்கு விளக்கும்.

பாலஸ் தாவத் கிரீடா சக்த:
தருணஸ் தாவத் தருணீ சக்த:
விருத்தஸ் தாவத் சிந்தா சக்த:
பரே பிரம்மணிக: அபிந சக்த:

[இளமையில் விளையாட்டிலும், யௌவனத்தில் இளம்பெண்களிடத்தும், முதுமையில் கவலையிலும் ஆழ்ந்திருத்தலன்றி மேலான பரம்பொருளை எவனும் ஒருபோதும் எண்ணுவதில்லை]

முதுமையில் கவலைக்குள்ளாகாதவராய்த் தருணீ சக்தராகவேயிருக்கும் முதியோர் பலர் உண்டு. அவர் தாங்கள் மூத்துவிட்டதாலேயே தமக்குப் பிறர் வணக்கங்காட்டி நடந்துகொள்ள வேண்டுமென்றும், அப்படி நடவாதவரெல்லாம் தற்கால நாகரிகத்திற்கேற்பத் தான்றோன்றித் தம்பிரான்களாய்த் திரிபவரென்றும், அவரைப் பிறர் அணுகுதலும் அவரோடு பழகுதலும் பிழையென்றும் எடுத்துரைக்கிறார்கள். அறிவிற்கு மூப்பதோ, வயதிற்கு மூப்பதோ? அன்னோர் தாங்களடைந்திருக்கும் பதவி உயர்பதவியென்று காட்டுவதற்கு அவரிடங் காணப்படும் சிறந்த குணங்கள் என்ன? உலகவழக்கத்தில் தாம் கற்றுக்கொண்ட சில பழமொழிகளே அவர்களது அறிவின் முதிர்ச்சியை விளக்குமென அவர் கூறுவர். 'காரியம் பெரிதோ வீரியம் பெரிதோ?' என வொருவன் கூறுவானாயின் அவன் நிறைந்த அறிவுடையவனென்று பிறரால் எண்ணப்படுவதுண்டு. கோழை மனத்தராய், நாணம் தன்மதிப்பு இவைகளை நீத்துப் பிறர்செய்யும் கொடுமைகளை அடிமைகளென ஏற்றுத் தங் காரியம் நிறைவேறப்பெற்றுச் சிறிது பொருளடைவதோ மானுடர்க்கு உயர்வைத் தருவது?

ஆங்கிலத்தில் பேன் ஜான்ஸன் எழுதிய ஒரு சிறு செய்யுளை அவர்கள் அறியார் போலும். பெருமரம் போல் உருவத்தி லுயர்ந்தும் பருத்து மிருப்பது மனிதனைச் சிறந்தவனாகச் செய்யாது. அல்லது,தேக்குமரம் போல் முன்னூறு ஆண்டுகள் நிலையூன்றி யிருந்து இறுதியில், உலர்ந்தவராய், மொட்டையராய்ச் சாரம் இல்லாதவராய்க் கீழ் விழுவதும் மேன்மையைத்தராது. மலர்ந்து அன்றே அழிவதாயினும் மல்லிகை சித்திரையில்அழகைத் தந்து மனதிற்குக் களிப்பையும் கிளர்ச்சியையும் அளிக்கும்; அது உள்ளவரையில் மண நிறைந்து ஒளி பரப்பாநிற்கிறது. அதுபோல் சிறு அளவில் உண்மையழகைக் காண்கிறோம்; உயிர் வாழ்க்கையும் குறைந்த அளவில் நிறைந்த நீரதாய் இருப்பதும் உண்டு".இதன்உண்மையை ஒப்புக்கொள்ளாதார் யார்? ஒருவன் இளைஞனாய், உற்சாக முடையவனாய் ஏதொரு காரியத்தையும் சுறுசுறுப்புடன் செய்யவல்லனாய்இருந்து, தன் மனதிற்குத் தோன்றியது உண்மையெனவும் நியாயமெனவும் உணர்ந்து அதற்கேற்பச் சில மொழிகள் பகருவானேல் அச்சொற்கள், உண்மை யொருபுறமிருக்க ஊதியமே சிறந்ததென வெண்ணும் முதியோர்க்கு ஏற்பதில்லை, 'ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு' என்று அவர்கள் சொல்வார்களானால் அருகுள்ளாரனைவரும் ஒருங்கே நகைத்து அவனை மூடனாய்ச் செய்வது வழக்கம். அச்சிறுவனே பெரியோனாய்த் தான் இதுவரையிற் சொல்லிவந்தனவற்றையும், கற்பித்து வந்தனவற்றையும் மறுத்து, வாழ்க்கை முரண்பட வாழ்ந்து, ஒருவகை வயதடைந்துவிடின், பின்னர் அவன் சொல்வன யாவும் வேதவாக்குகளெனப் போற்றப்படுகின்றன. பழமொழிகள், உலகில் கூரிய அறிவும் சீரிய செயல்களும் இல்லாமல் உழலும் அந்த இயற்கையுடைய மாந்தர், தங்கள் உயிரை வெறுக்காமல், இவற்றைக்கொண்டு சாந்தி செய்துகொண்டு தாங்களடைந்த நிலையிலேயே திருப்தியுடையவராய் உயிர்வாழ ஏற்பட்டவைகளேயன்றி வேறொன்றுமில்லை. மந்தபுத்தியும் பெருமுயற்சியும் இல்லாமல் வாழும் மாந்தரே உலகத்திற் பெரும்பாலார். ஆதலால், இப்பழமொழிகள் உலகத்திற்கு ஏற்றவையும் அவசியமானவையுந்தான். அதனால் அனுபவமுதிர்ச்சியால் ஏற்பட்ட அப் பழமொழிகளே எல்லோருக்கும் எக்காலத்தும் ஏற்றவை யென்பதும், அவைகளைக் கடைப்பிடித்தே ஒருவன் ஒழுக வேண்டுமென்பதும் இல்லை. 'உன் வயதில் நான் அப்படித்தான் நினைத்தேன்' என்று பெரியோர் மொழியின், அதற்குச் சிறியோன் 'உமது வயதில் நானும் அப்படியே நினைப்பேன்'என்று விடை பகருவானாயின் அது கொள்ளப்படுவதில்லை. ஏன்? அது உண்மையாகாதோ? நாம் சிறுவயதில் ஆடிய ஆட்டங்களும் ஓதிய நூல்களும் முதியோராயபின் மனதிற் குகந்தனவாயிருக்கின்றனவோ? உட்புகுந்தும்,ஆடுவதும்,காற்றாடி விடுவதும் விளாங்காய்ச்சண்டை யிடுவதும், பெரியோர்க்கு ஏற்றவையாயிருக்குமோ? எனினும் ஒருகால் தாமும் அக்களியாட்டயர்ந்ததை எண்ணி இளஞ்சிறார்களிடம்அனுதாபங் காட்டாததேனோ?நாயகனும் நாயகியும் பல இடையூறுகளுக் குட்பட்டுப் பின்னர் ஒருவரை யொருவர் மணக்கும் போக்குடைய பொய்க்கதைகளை, கண் துஞ்சாமலும், உணவு கொள்ளாமலும் தாயின் சொற்களைப் பொருட்படுத்தாமலும் ஓதிய நாட்கள், சிறந்த ஒழுக்கமுடைய நாட்களென நாமெண்ணுகிறோமோ? அக்கதைகள்தான் முதுமையில் இனிமையைத் தருகின்றனவோ? ஒருவன் ஒருத்தியொழிய வெழுதும் கதைகளில் நமது மனம் நாடவில்லையோ? கோலியாடுவதிலும் பம்பரம் ஆடுவதிலும் செல்லாது பல்லவமென ஒல்கும் பாவையர்மேற் கண் பரப்புவது முதுமையிலழகோ ? 'யான் சொல்வது போற் செய், யான் செய்வதுபோற் செய்யாதே'என்று பெரியோர் சொல்வதால், அவரிடத்துச் சிறியார்க்கு நல்லெண்ணம் உண்டாவ தெப்படி?

அறிவாலும் ஒழுக்கத்தாலும் முதிர்ந்த பெரியாரது அபிப்பிராயங்களே இறுதியில் ஞானமென வீங்கும். நல்லோரது அபிப்பிராயங்கள் உண்மையை அறியும் பாதையிலுள்ள பல சிலைக்கற்களாம். பெரியோர் அவ்வழி முழுவதையும் கடந்துவிட்டாரென்பதில்லை.பால்மணம் மாறாப் பாலரிடம் உண்மை வெளிப்படும் என்பது ஆன்றோர் கொள்கை. பால்வழிய ஞான சம்பந்தர் பரமனைப் பாடினார் என்பது அவ்வுண்மையை உருவகப் படுத்திக் கூறியது போலும். தானே ஆராய்ந்தறியாது, தன்னனுபவத்தால் உணர்ந்து தேறாது, பிறர் வாய்ப்பட்ட பழமொழிகளைப் பிள்ளையெனப் பிதற்றும் பெரியோர் பெரியாராகார். அம்பெனப் பிறர்மேற் செலுத்தி மனதை யூறுபடுத்தவும், வாயை யடக்கவும்

வல்ல பழமொழிகள் உலகிற் பலவுள. அவை நியாய வாதங்களுக் கேற்க மாட்டா. அந்தப்பழமொழிகட்கு நியாயமில்லை; அறிவில்லை. அவைகளோ சிறிதும் யறிபப்படுவதில்லை; அறிவுறுத்துவதுமில்லை. பத்திரிகைளில் விளம்பரப்படுத்தப்படுகிற "கிழவரை வாலிபராக்கும்" மருந்துகள் உண்மையிலேயே ஆக்கை இளமையைத் தந்து ஐயீராட்டைப் பிராயத்தராய்ச் செய்யவல்லதேல், முதியோரில் எத்தனைபேர் இளையோராக விரும்புவர்; அப்படி விரும்புங் காலத்து, அப்பருவத்திற்குரிய அறிவோடும் உணர்ச்சியோடுமே இருக்க விரும்புவரா அல்லது தமக்குரிய அனுபவ அறிவோடு யாக்கை இளமையைமட்டும் அடைய விரும்புவாரா என்பது நல்ல கேள்வியாகும். பலர் பின்னைய நிலையையே விரும்புவார் என்பது திண்ணம். அப்போது அவர் ஆத்திச்சூடியையும் கொன்றைவேந்தனையும் வருந்திக் கற்கமாட்டார். தமது செல்வத்தைப் பேழையிற் பூட்டிக் கந்தையுடுத்தி யுழலார். சிறுவர்களை யடிப்பதையும் குட்டுவதையும் அவர் மேல் உணங்கிய சுணங்கனென வீழ்வதையும் அறவே ஒழித்துவிடுவார். வெள்ளிய மயிரும் கிழத்தன்மையும் இறுதியில் உண்டாவதால் அதைப் பெருமை படுத்த வேண்டுமென்பதை ஒவ்வார். அது இறுதியில் வருவதென்றால் இளமை முதலில் வருவதொன்றல்லவோ? உயிர்வாழ்க்கை யென்பது ஓர் பிரயாணம். அதில் வழி நடந்து செல்லுங்கால் ஒரு மூலையைக் கடந்துவிட்டால் மீண்டும் திரும்பி அதை யடைய முடியுமென்பது இல்லை. மேலும் இளமையென்பதொன்று எப்பொழுதும் உண்டு. முதுமை எப்பொழுதும் வருமென்பதில்லை. பிணியும், அபாயமும் அதனை வராது தடுக்கக்கூடும். இவை யுண்மையாயிருக்க நம்மவர் சிறுவர்களைப் போற்றுதேதேனோ? சிறுவரென்றால் அடிப்பதும், உதைப்பதும், கடுகடுத்துப் பேசுவதும், படிக்கப்போ என்பதும் பெரியோர்க்கியல்பு. சிறியோர் நாம் ஆரம்பத்திற்சொல்லிய அறிவின்பயனால் கேட்கும் சிறு கேள்விகளுக்கு விடைபகரப் பெரியோரால் முடிகிறதில்லை. அக்காலை, சிறியோரை 'வாயை மூடு' எனச் சினந்து வாயடைத்து விடுவதால் பிள்ளைக்குப் பெரியோரிடத்தில் நல்லெண்ணம் உண்டாகுமோ? வாயை மூடிக்கொள்ளுகிறான் என்பது உண்மையே. ஆனால் 'இவன் உண்மை யறிவில்லாப் பதடி; நல்லொழுக்கமில்லா மூர்க்கன்' என்று அவன் மனதில் எண்ணுவதைப் பெரியோன் தடுக்கமுடியுமோ? கிராமபோன் என்னும் வாத்தியப் பெட்டியைத் தன் இல்லாள், உடன் பிறந்தாள், முதலிய பெண்கள் களித்துமகிழக் காட்டிப் பெருமையடைந்த பெரியோனொருவன், அதன் சாவியைக் கழற்ற வகையறியாது நெடுநேரம் வருந்திய போது, அருகேயிருந்த சிறுவனொருவன் அதை இடது கைப்புறம் திருவிப்பாருங்கள் என்னலும் அவன் அவ்வாறே செய்யச் சாவியும் கழன்றது. அப்போது சிறுவன் அன்றுதான் கற்ற கல்வியைக் காட்டிச் 'சிறியோரெல்லாம் சிறியருமல்லர்' என்றுரைத்தவுடன் பெரியோன் புகன்ற மொழிகளைச் செவிகொடுத்துக் கேட்கவொண்ணவில்லை. அயல்நின்று ரனைவரும் நகைத்தனரேயன்றிப் பெரியோனுக் கதனால் பெரும் வெற்றி யாதுமுண்டாகவில்லை. சிறியோர் அன்பு காட்டற்பாலர்; அவர் அன்பிற்குரியவர். அவர் அறிவின் மிக்கவர். வாய்விட்டுப் பெரியவரைப்போல் பேசப் பழகாத குறையால் மௌனங்கொள்வரே யன்றி அவர் அதிதீவிர அறிவுடையவர். ஏதோ பண்டந் தின்னுஞ் சிறு குழந்தையை வார்த்தையொன்றுஞ் சொல்லாமல், முகத்தைச் சுளித்து உறுத்துநோக்கில், அக்குழவி உடனே 'அம்மா கொடுத்தாள்' எனப்புகல்வது, பெரியோர் மனதில் நிகழும் சங்கையைத் தன்னறிவால் யூகித்தறிவதாலன்றோ? அவ்வாறு முன்னறியும் தீர்க்க தரிசியை, இறைவனுக்குரிய சுயேச்சை முதலிய இயைபப்பெற்ற இளையோனை, உலவா இன்பச் சுடரொளியை உண்மையிலறிந்த பெரியோனைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து அவன் பெரியோர்க்குரிய அவலக்கவலை, கையாறழுங்கல் விரைவிலேயே தவறாது அடையும் நாளை எண்ணி, இளமையுள்ள நாள்வரைக்கும் அவன் துன்பமென்பதை யறியாவகைச் செய்ய முதியோர் முயல்வாராக.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்
SADVAIDYASALA NANJANGUD
THE UNITED CONCERN, MADRAS
டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (1-8-0) பிரான்சு:
டிப்போ, பம்பாய் கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
மதுரை காஞ்சீபுரம்.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும்:—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம்:— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை:—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி:—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம்:—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம்:—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1 கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்விற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம்:—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50.
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன்:—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம்:—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

கிருமபோன்

சங்கீத கீர்த்தனும்ருதம்.

இதுபோது கிரும்போன் என்னும் விஞ்ஞான கருவியில்பாடிவருந்திருச்செந்தூர் ஷண்முகவடிவு எஸ். வி. சுப்பய்யா பாகவதர், டி. எம். காதர்பாட்சா, எஸ். ஆர். கமலம், பெங்களூர் தாய்,மிஸ்.கெ. ரங்கநாயகி, சேலம்அம்மாகண்ணு, திருவிடமருதூர் பவானி, தனுக்கோட்டியும் சகோதரியும், சுந்தரியும் வரலட்சுமியும், வி. சுப்ரமண்ய பாகவதர், பபூன் ஷண்முகம், A. S. ராசப்பா, கனகரத்தினமும் மாணிக்கமும், சேலம்கோதாவரி, லோகாம்பாள், பார்வதி அம்மாள், வி. சாரதாம்பாள், சிவக்கொழுந்து, வனஜாட்சி, வேதம்மாள், வீணை தனம் குமாரத்திகள், பிரம்மஸ்ரீ என். எஸ். துரைசாமி அய்யர், நியமம் நடராஜ பாகவதர், எ. சாமி நாயுடு, வைத்தியநாத பாகவதர், மற்றுமுள்ள ஸ்திரீ திலகங்களும் அரங்க மேடையில் குயிலோசையோ? காந்தர்வ நாரதர் கிம்புருடர் தொனியோ என்று சந்தேகிக்கும் வண்ணம் தென்னுடெங்கும் அமிர்த மழை பொழிந்துவரும் மாஸ்டர் எஸ்-ஜி கிட்டப்பா, கே-பி சுந்தராம்பாள் முதலிய நடிக ரத்தினங்களுடைய முக்கனி ரசத்தையொத்த (670-பக்கங்களுக்கு மேற்பட்ட) கீர்த்தனை, விருத்தம், கட்டளைக் கலித்துறை முதலிய அரும்பெறும் பாடல்களை ஒருங்கே யமைத்து ராக தாளங்களுடன் பிளேட் நெம்பருடன் அழகியகிளேஸ்தாளில் அச்சிட்டுக்கண்ணைக்கவரத்தக்கபயிண்டுசெய்து எங்களிடம் சொற்ப விலைக்குத் தயாராக யிருக்கிறது.

தனி பாகம் ரூ. 1-0-0. மூன்றுபாகம் கட்டடம் ரூ. 2-8-0.

ஷண்முகானந்த புத்தக சாலை,
நயினியப்பநாயகன் தெரு, பி. டி. மதராஸ்.

:: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணு 12.

கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.

Estd. **NATIONAL** 1906
INSURANCE COMPANY LIMITED.
Head Office:-9, Old Court House St., Calcutta.

Insured for how much?
Is it sufficient?
Will it hurt you to make little sacrifices to pay your Life Insurance premium?
Can we satisfy you?
For Literature
Apply to:—
T. ANANTACHARI, B.A.,
Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி

பிரசுரங்கள்.

சங்க நூல்

சென்னைப்பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
திருவாளர் - கா. ரா. கோவிந்தராஜ முதலியார்
எழுதியது.

தமிழின் அரும்பெரும் செல்வமாய் வாய்த்திருக்கும் சங்ககால இலக்கியங்களைக் கற்பவர்க்கு இணையிலாப் பேருதவி யளிக்கவல்ல இந்நூல் எவ்வெவர் மாட்டும் இருக்கவேண்டியது இன்றியமையாதது. முச் சங்கங்களின் வரலாறும், அவ்வச் சங்கங்களில் பாடப்பெற்ற நூல்களின் தன்மையும், இவையனைய பிறவும் இந்நூலின்கண் விளக்கிஇருக்கக் காணலாம். இத்தகைய அறிவினை யளிப்பதுடன் ஓதுதற்கும் கனி இனிது இந்நூல். தமிழ்ப்பற்றுடையவ ரனைவர் கையிலும் இந்நூலொன்று இல்லாமல் தீராது. சங்க நூல்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன், இந்நூலைக் கற்றிருப்பாராயின், அச் சங்கநூல்களின் உண்மைப் பொருளையும், அழகையும், பயனையும் உணர்வது எளியதாகும். விலை ரூபா 1—4—0.

கந்தபுராண வசனம்

வித்வான்
என். வி. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்கள்
எழுதியது.

முருகப் பெருமானது திருவவதாரச் சிறப்பினை யுரைக்கும் கச்சியப்பசிவாசாரியார்தம் பெருங்காப்பியமாகிய கந்தபுராணச் செய்யுள்களைத் தழுவித் தெளிவும் இனிமையும் வாய்ந்த செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள. இந்நூல், முதனூலின் பெருமையிற் சிறிதுங் குறையாமல், தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசிப் பத்தித்தேன் சொட்டி ஞானங் கனிந்த வொரு கற்பகத் தருவிற்கு நிகராகு மென்பதிலையமில்லை. ஆறுமுகமுடைய அருட்பெறும் குமரவேளின் திப்பிய சரித்திரத்தைச் செய்யுள்வாயிலாக ஓதியுணர்ந்து அவர் கருணைக்கு ஆளாகவல்லார் சிலரேயாக, எத்தகையினோரும் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு வசனநடையில் வரைந்துள இந்நூல் தமிழரனைவர்க்கும் அருமருந்துபோல் அமைந்திருக்கின்றது. (கிளேஸ் பேபர்) விலை ரூபா 2—8—0.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி
திருவல்லிக்கேணி, :: :: சென்னை.

வர்த்தமானம்

தமிழ் முன்னேற்றம்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்க வருடக் கூட்டத்தில் தலைமை வகித்த ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியார் செய்த உபந்நியாசச் சுருக்கம் வருமாறு:—

"தமிழோ காலங்கடந்த தொன்மொழி. சிவபெருமான் இம்மொழியை நம்மனோர்க்குத் தந்தருளினர். அதனை முதன்முதலாகக் கற்று வளர்த்தவர் அகத்தியர். அவர்தம் மாணக்கர் தொல்காப்பியனர்" என்ற புராணிகப் பொய்களைச் சொல்லிச்சொல்லி மகிழ்வது என் கருத்தன்று. அகஸ்தியர் பரம்பரையொன்றிருந்ததென்றும், அப்பரம்பரையில் வந்தோர் அனைவரும் அகஸ்தியர் என்றே அழைக்கப்பட்டனர் என்றும், அன்னவர்களில் ஒருவரே அகத்தியம் என்னும் நூலைச் செய்தவர் என்றும், அவரும் தொல்காப்பியருக்குப் பின் வந்தவர்என்றும், யான் சர்வகலாசாலைப் பிரசங்கமொன்றில் விரிவாய் ஆராய்ந்துள்ளேன். இதைப்பற்றி யான்இப்பொழுது ஒன்றும்பேசப்போவதில்லை. ஆனால் பண்டைக்காலத்தில் உயர்தனிச் செம்மொழியாக விளங்கிய தமிழ்மொழி இந்நாள் உற்றுள நிலையையும், அம்மொழி முன்னேற்றமுற நாம் செய்பத்தக்கவைகளைப் பற்றியுமே ஒருசில வார்த்தைகள் சொல்ல நினைத்துள்ளேன்.

குலவழக்கத்தின் பேராலும், குலதர்மம், சாஸ்திரம் என்று சொல்லிக்கொண்டும் கண்மூடிகளாய்க் கால தேச வர்த்தமான நிலையுணராமல் பழமையில் பிடிப்பு வைத்து விவகரித்து வருகின்றனர். இதனால் பழைய வழக்கங்களை அடியோடு ஒழித்துவிடவேண்டு மென்றும், புதுவது புகவேண்டுமென்றும் நான் சொல்வதாக மதித்துவிடவேண்டா.

"பழமையானதாகட்டும் அல்லது புதுமையானதாகட்டும். நல்லகொள்கைகளைப்பற்றி நாம் ஒழுகவேண்டுமென்பதே என்கருத்து. பழையனவா யிருத்தலினுலேயே தீயகொள்கைகள் நன்மை பயக்கமாட்டா. நல்ல கொள்கைகள் புதியனவாயினும் பழையனவாயினும் அவற்றை நாம் மேற்கொளல் வேண்டும். காலமும், இடமும் மாறுபடுங்கால் கொள்கைகளும் கருத்துக்களும் மாறுபடவே வேண்டும். மிகவும் பழமையானதான கைக்கிளையையும் களவியலையும் நாம் இப்பொழுது கைக்கொண்டோமோ? மணமகனும், மணமகளும் ஒருவரையொருவர் தெரியாதவர்களாகி ஒருவர் கருத்தை மற்றவர் அறியாதநிலையில் இருவரை ஒன்று சேர்த்துவைத்து முடிபோட்டுவிடும் புதுவழக்கத்தைக் கைக்கொள்ளாது நாம் விட்டுவிட்டோமோ. காதலித்துப் பின் மணப்பது பண்டைக்கால முறை, மணந்து பின் காதலாவது இக்காலப் புதுமுறையாய்ப் போயிற்று. எது சிறந்தது என்பதை அறிஞர் ஆராய்வாராக.

"இது இப்படியிருக்க இலக்கியநிலையை ஆராய்வோம். பண்டைக்காலத்துச் சங்கச் செய்யுட்களெல்லாம் ஒவ்வொரு கருத்தை ஒவ்வொரு பாட்டில் அடக்கிக் கொண்டிருந்தன. பின்னர் தொடர்நிலைச் செய்யுளாகியமணிமேகலையும் சிலப்பதிகாரமும் தோன்றலாயின. பின்னர்ச் சிந்தாமணியும் வேறு பல நூல்களும் வரலாயின. அதன்பின்னர் வடமொழி நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படலாயின. அவை ராமாயணம் பாரதம் ஆய நூல்கள். சைவ வைணவ நூல்களும் பின்னர்த்தொடர்ந்தன. புராணங்களும் அந்தாதி முதலிய சில்லரை நூல்களும் நிறைந்தன. இந்நூற்கள் தான் தமிழைச் சனியெனப் பற்றின. சங்ககாலத்தில் புலவர்கள் இயற்கையை நுணுகிஆராய்ந்து,இருந்ததை இருந்தவாறு கூறினர். சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் நூற்களில் உண்மையோடு பொய்யும் கலக்கலாயின. அவைகளுக்குப் பின் வந்தவைகளில் பொய்மையோடு சிறிதே உண்மை இருப்பனவாயின. அரிய விஷயங்களை ஆய்ந்து, அறிந்தவைகளை ஒளியாதும் மிகைப்படக் கூறாதும் வெளியிடுவதே கற்றோர்கடன்.

"தமிழ்மொழியில் செய்யுளியல்பு நன்கு அமைந்திருக்கின்றது. நாள் செல்லச்செல்ல பலவேறுசெய்யுள்கள் புகுந்தன. உதாரணமாக விருத்தத்தை எடுத்துக் கொள்வோம். பெரும்பான்மை வழங்குகின்ற ஆசிரிய விருத்தங்கள் கழிநெடிலடியை உடையன. அவற்றுள் சந்தபேதங்கள் பல. இத்துணை வேறுபாடுகளுடன் வழங்கப்படும், இச்செய்யுளியலுக்குப் பழைய இலக்கணம் யாதும் இல்லை எனத் துணிந்து கூறலாம். எனவே அறிஞர் ஒன்றுகூடி, கால நிலையையும் மனத்திற்கொண்டு செய்யுள் இலக்கணம் ஒன்றை நிறுவவேண்டும். இதுபோலவே உரைநடை நூல்களுக்கும் இலக்கணம் வகுத்தல் வேண்டும். செய்யுள்களுக்கான விதிகள் உரைநடையைப் பாதிக்கக் கூடாது. மேலும் புதியபுதிய கருத்துக்கொண்ட செய்யுள்களைச் செய்வது கவிகளின் கடனாகும். மற்றப் பாடைகளிலிருந்து மொழிபெயர்ப்பு நூல்கள்பல வெளிவரவேண்டும். மேல் நாடுகள் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியில் தலை சிறந்து விளங்குகின்றன. நாமும் அச்சாத்திரங்களைத் தமிழில் செய்யவேண்டும். இப்பொழுதுபலசமஸ்கிருதபதங்கள் தமிழில் கையாளப்படவில்லையா? மேல்நாட்டுப் பாஷைகளினின்றும் எடுத்து நம்மொழியில் இல்லாத பதங்களை நாம் கையாளலாம். இத்தகைய முயற்சிகளில் அறிஞர்கள் ஈடுபடவேண்டும். பொதுக்கல்வி வளர்ச்சிக்கும் உயர்தரக் கல்வி வளர்ச்சிக்கும் ஆதாரம் வர்த்தமானப் பத்திரிகைகள். மேல்நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றத்திற்குக் காரணம் பத்திரிகைகள். நம் மொழியில் பல பத்திரிகைகள் தோன்றிப் பல பல துறைகளிலும் உழைத்துத் தமிழ் முன்னேற்றத்தை அடைவிக்க வேண்டும்.

***

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டித் தலைவரான ஸ்ரீமான் சக்ரவர்த்தி இராஜகோபாலாசாரியார் இம்மாதம் 10-ம் தேதியன்று சிறையினின்று விடுவிக்கப்படுவார் என்றுதெரிகின்றது. ஏனெனின் அவருக்குத் தண்டனைக் காலத்தில் மாஜிஸ்டிரேட்டால் விதிக்கப்பட்ட அபராதத் தொகை வசூலிக்கப்பட்டதாம். மற்ற 6மாத காவல்தண்டனையில் ஜெயில் அதிகாரிகள் அவரது நன்னடத்தைக்காக 20நாட்களைத் தள்ளுபடி செய்துள்ளார்களாம். எனவே 10-ம் தேதியன்று வெளிவருவார். 11-ம் தேதியன்று சென்னையில் தங்குவார், என்று ஒரு செய்தி கூறுகின்றது.

***

R. 101. என்னும் ஆகாயக் கப்பல் இம்மாதம் 5-ம் தேதியன்று இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்குப் பிரயாணமாயிற்று. அக்கப்பல் பிரான்ஸிலுள்ள போவாய் என்னுமிடத்தில் இருக்கும் மலையொன்றில் மோதுண்டு உடைந்து போயிற்று. உடனே கப்பலில் தீயும் ஏற்பட்டது. இக்கப்பலில் இருந்த ஆகாய விமான இலாக்கா மந்திரியான லார்டு தாமஸ் என்பவர் உள்பட 53 பேர்கள் இருந்தனராம். அவர்களில் எழுவர் தவிர மற்றவர் அனைவரும் இறந்துபோயினர். லார்டு தாமஸும் இறந்தவர்களில் ஒருவர் ஆவார். உயிர்தப்பிய எழுவரும் தீயால் தேகம் வெந்துபோய் வயித்திய சாலையில் இருந்து வருகின்றனர்.

189124

இனம்! இனம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனு பஜார், மதராஸ்.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமூக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு சந்தா ரூபா 2 0 0
வெளிநாடு „ „ 2 8 0
தனிப்பிரதி விலை அணா 0 4 0

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

தேவதாசிகள்

அமெரிக்க மாது மிஸ் மேயோவால் எழுதப்பட்டது. இந்தியர் பழக்க வழக்கங்களைப்பற்றி எழுதியுள்ளார். படிக்க வேடிக்கை. விலை ரூ. 1-0-0.

முத்தையா புக் டிப்போ,
தபால் பெட்டி 99, சென்னை.

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம்	...	ரூ.	5.
அயோத்தியா காண்டம்		ரூ.	5.
ஆரண்ய காண்டம்	...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம்	...	ரூ.	4-8.
சுந்தர காண்டம்	...	ரூ.	5.

(வி.பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல்
சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார், போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—"கலா நிலயம்",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)